# University of Jaffna



## Prof. K. Kailasanathakurukkal Memorial Lecture – 2023

(Emeritus Professor of Hindu Civilization)

**“சித்தர் பரிபாஷைகள் – அறிவியல் நோக்கிலான கட்டவிழ்ப்பு முயற்சி”**

by

**Dr.S.Muhunthan,**
*Senior Lecturer,*
*Department of Hindu Civilization,*
*Faculty of Hindu Studies,*
*University of Jaffna*

on

***Wednesday, 16th August 2023***
***at 3.00pm***

at

**Kailasapathy Auditorium,**
**University of Jaffna.**

# Prof. K. Kailasanathakurukkal
# Memorial Lecture – 2023

(Emeritus Professor of Hindu Civilization)

**Titled**

## சித்தர் பரிபாஷைகள்- அறிவியல் நோக்கிலான கட்டவிழ்ப்பு முயற்சி

By

**Dr.S.Muhunthan,**

*Senior Lecturer,*
*Department of Hindu Civilization,*
*Faculty of Hindu Studies,*
*University of Jaffna*

16.08.2023



**Prof. K. Kailasanathakurukkal**

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்து நல்லூரில் சிவாச்சாரிய மரபுவழி வந்த வாழ்நாட் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் வேத சிவாகமப் பாரம்பரியத்தையும், பல்கலைக்கழகம் சார்ந்த ஆய்வறிவியற் புலமைத்துவத்தையும் இணைத்த யுக சந்ததியாக திகழ்கிறார். சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் முதலான மொழி வளமும், இந்து நாகரிகம், இந்தியவியல் எனத் திரிசூல முனைகளாக இவரது ஆய்வுத்தடங்கள் நீட்சியும், கூர்மையும் பெற்றுத் திகழ்ந்தன.

இவையாவற்றிற்கும் மேலாக அடக்கம், பணிவு என்பவற்றுடன் **"எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலாகிய"** அறமும் கிரியைகளை மனமொன்றி ஆற்றும் திறனும் இவரிடம் அமையப் பெற்றிருந்தன.

சேர்.பொன்.இராமநாத வள்ளலின் சமய குருவாக விளங்கிய நல்லூர் ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானத்தின் பரிபாலகர் சிவஸ்ரீ ந.வே.கார்த்திகேயக் குருக்கள் சுந்தரம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாகிய பேராசிரியர் கா.கைலாசநாதக்கு ருக்கள் பரமேஸ்வராக் கல்லூரியின் பழையமாணவன் என்பதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆரம்பப் கர்த்தாக்களுள் ஒருவருமாவார். இந்து நாகரிகத் துறையை புதிதாகப் ஆரம்பித்ததோடு அத்துறைத் தலைவராகவும் மனிதப்பண்பியற் பீடாதிபதியாகவும் விளங்கித் தனது செயலுறுதியும், சாத்வீக பாவமும் குறையாது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகளில் தம்மை முழுமையாக அர்பணித்த ஆளமையாளராவார்.

வைதிக மரபில் அறிவு, பயிற்சி, அனுபவம் நிறைந்த பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக இலக்கியம்), சைவத்திருக்கோவிற் கிரியை நெறி முதலான காத்திரமான நூல்களின் ஆசிரியராவார். இந்து நாகரிகத்துறையின் ஸ்தாபகத் தலைவராகவும் முதற்பேராசிரியராகவும் விளங்கியதோடு,

உலகளாவிய நிலையில் இந்து நாகரிகம் எனும் அறிவுப்புலத்தை கால்கொள்ளச்செய்த சிறப்பிற்குரியவருமாவார்.

அறிவு, ஆளுமை, முதிர்வு என்பவற்றுடன் ஒன்றுபட்ட வெண்மையான பண்பாட்டுக் கோலம், உடை, விறுவிறுப்பு, நிமிர்ந்த நடை என எமது பல்கலைக்கழக சூழலை தமது பிரசன்னத்தால் உயிர்ப்பூட்டி உலாவந்து பாதம் பதித்த காலங்கள் இன்றும் எம்மால் உவகையுடன் நினைவுகூரப்படுகின்றது. சாத்வீக குணம் நிறைந்த பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் அவர்கள் முன்னேஸ்வரம் வடிவழகி அம்பாள் மீது கொண்ட அளவற்ற பக்தி, கிரியைகளுள் வசந்த நவராத்திரி காலத்து சண்டீஹோம, அபிஷேக ஆராதனை, மந்திர உச்சாடனம், ஸ்ரீசக்ர பூஜை முதலானவை பக்தர்களையும் பரவசமூட்டும் தன்மையன.

இப் பெருந்தகையின் சேவையினை நயந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாழ்நாட் பேராசிரியர், கௌரவ இலக்கிய கலாநிதி ஆகிய பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்துக் கற்கைகள் பீட உருவாக்கமும் இதனைத்தாங்கும் விரிவுரையாளர் குழாமும் இப் பெருந்தகையினைக் குருமூலமாகக் கொண்ட விழுதுகளே என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருந்தகைக்குக் கௌரவமளிக்கும் வகையில் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபையின் முன்னெடுப்பில் நிகழும் ஐந்தாவது நினைவுப் பேருரைக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். இப் பெருந்தகையின் வித்துவச் சுவடுகளின் வழிவந்தவராகிய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.முகுந்தன் அவர்கள் **"சித்தர் பரிபாஷைகள் - அறிவியல் நோக்கிலான கட்ட விழ்ப்பு முயற்சி"** எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றுகின்றார். அவருக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சித்தர் பரிபாஷைகள்- அறிவியல் நோக்கிலான கட்டவிழ்ப்பு முயற்சி

**அறிமுகம்**

இந்துசமய மரபில் சித்தர்களின் ஆளுமை பல்பரிமாணமுடையது. அது வெறுமனே அருளாளர்கள் என்ற ஒற்றை அடையாளத்துடன் வரையறுக்கப்பட்டதல்ல.

கருத்தியல்ரீதியாகச் சித்தர் பாடல்களின் பொருண்மைகளை நோக்கில் ஒரே சித்தரின் இருவேறுபட்ட பாடல்களிடையே "முரண்" தொனிக்கக் காணலாம்.

*"பேரினை நீக்கிப் பிணம் என்று பெயரிட்டு*
*நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தாரே"* (திருமந்திரம், பா.145)

எனத் தேகத்தின் நிலையாமையைப் பேசிய அதே சித்தர்,

*"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்"*
*"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன்"* (திருமந்திரம், பா.724)

*"உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"*
(திருமந்திரம், பா.725)

என தேகத்தை ஆரோக்கியமாகப் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்துவார்.

ஏனெனில் சித்தர்கள் ஏககாலத்தில் உடற்கூற்றியல் வல்லுனர்களாகவும் ஆன்மிக ஞானிகளாகவும் திகழ்ந்தவர்கள். பகுத்தறிவு வாதத்தையும் பரம ஞானத்தையும் சமதளத்தில் விவாதித்தவர்கள். போகத்தையே யோகமாகவும் யோகத்தைப் போகமாகவும் விபரித்தவர்கள்.

பெண்மையைச் சித்தர்களைப் போலப் பூசித்தவர்களுமில்லை. அவர்களை விஞ்ச எவரும் தூஷித்தவர்களுமில்லை. இத்தகைய கருத்தியல் முரண்நகைகளுக்குக் காரணம் உபதேசியின் தடுமாற்றம் அல்ல. செவிமடுப்போனின் பக்குவநிலையைப் பொறுத்து உபதேசிக்கும் பாங்கினை மாற்றிக்கொள்ளும் உத்தியினை சித்தர்கள் கையாண்டமையே இதற்கான பின்னணியாகும்.

இந்துப்பண்பாட்டு மரபில் மருத்துவம், இரசவாதம், உடற்கூற்றியல், வர்மம், சோதிடம், யோகசாதனை முதலிய அறிவுப் புலங்களுக்கான காத்திரமான பங்களிப்புக்களைச் சித்தர்கள் வழங்கியுள்ளனர்.

குறித்த அறிவுப்புலங்களுடன் தொடர்புடைய துறைசார் விற்பன்னர்களுக்குத் தெளிவுபடுத்துவதன் மூலமாக அவரவர்கள் தத்தமது மாணவர் பரம்பரைக்குத் தரமறிந்து உபதேசிப்பர் என்கிற "ஆழ்ந்திருக்கும் கவியுளமே" சித்தர்கள் தமது பனுவல்களில் விதைத்து வைத்திருந்த "விளங்கா முடிச்சுக்களின்" பின்னால் விளங்கும் நியாயப்பாடு ஆகும்.

"இந்த விளங்கா முடிச்சுக்களே" பரிபாஷை என்ற பெயரில் வழங்கப்பெறுகின்றன. சித்தர் பரிபாஷைகளில் அறிவியற் புலங்களான மருத்துவம், இரசவாதம், உடற்கூற்றியல், யோகசாதனை முதலியவற்றுடன் தொடர்புடையவற்றை இந்நினைவுப் பேருரையில் கருத்து விளக்கம் செய்ய முனைகிறேன்.

எமது இந்துநாகரிகத்துறையின் பிதாமகராகிய பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் திருவடிகளைப் பணிந்து அவருடைய குருவருளும் திருவருளும் நாடிப் பிரார்த்திப்பதுடன் இத்தகையதொரு மகானின் பெயரால் நடைபெறும் மாண்பமை நினைவுப் பேருரையில் உரையாற்றும் சந்தர்ப்பத்தை அளித்த எமது பல்கலைக்கழகத் துணைவேந்தர், இந்துக்கற்கைள் பீடத்தின் பீடாதிபதி உள்ளிட்ட நினைவுப்பேருரை ஏற்பாட்டுக் குழுவினர்க்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

*"இப்பொருட்கு என் உரை சிறிது ஆயினும்*
*மெய்ப்பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்"*

நன்றி

**கலாநிதி சயனொளிபவன் முகுந்தன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தோத்திரப் பனுவல்களுக்கும் சாத்திரப் பனுவல்களுக்கும் இல்லாத ஒரு விசேடித்த பரிமாணம் சித்தர் பனுவல்களுக்கு உண்டு. அதுவே அவற்றின் மறைபொருட் தன்மை அல்லது குறியீட்டுத் தன்மை ஆகும்.

சித்தர் பனுவல்களைப் பற்றி ஆராய்ந்த டி.என்.கணபதி, மீ.ப.சோமு, கரு.ஆறுமுகத்தமிழன், இரா.வாசுதேவன், க.நாராயணன், ஞானஜோதி சம்பங்கி போன்ற புகழ்பெற்ற ஆய்வாளர்கள் அனைவரிடமும் இக்கருத்து நிலைப்பாடு உண்டு.

சந்தியா பாஷை, சந்தபாஷை, சூனியசம்பாஷணை, மயங்குமொழி, தலைகீழ்மொழி (உலட்பாம்ஸி), ஆசாரியமுஷ்டி போன்ற சொற்றொடர்கள் இப்பரிபாஷைகளினைச் சுட்டும் வகையில் அமைந்துள்ளன. ஞானபோதகம் என்ற ஓலைச்சுவடி சித்தர் மொழியை "இரக்கமற்ற மொழி" என்கிறது. சித்தர் பாடல்களின் வெளித்தோற்றத்தைக் கொண்டு பொருள் கொள்ளக்கூடாது என்றும் அவ்வாறு செய்தால் அது பனியைப் பார்த்து நிலம் உழுத விவசாயியின் கதையாகி விடும் என்றும் அது எச்சரிக்கிறது. (கணபதி,டி., 2006)

திருமூலர் தொடர்பில் ஆய்வு செய்த கரு. ஆறுமுகத்தமிழன் தனது நூலில் ஓரிடத்தில் "திருமூலர் தமிழின் ஏமாற்றும் எளிமை" என்று குறிப்பிடுகின்றார். (ஆறுமுகத்தமிழன்,கரு.,2004:109) இது திருமூலருக்கு மட்டுமன்றி ஏனைய சித்தர்களின் பனுவல்களுக்கும் பொருந்தும்.

"சித்தர்கள் எவ்வகையைச் சேர்ந்தோராயினும் அவர்கள் யாவரும் ஒரு குறியீட்டு மொழியை, சங்கேத மொழியைப் பயன்படுத்தினர்" (கணபதி,டி., 2006:24)

தமது பனுவல்களுக்கு இத்தகையதோர் பரிமாணம் உண்டு என்பதற்கான வழிமொழிதல்கள் சித்தர் பாடல்களிலும் விரவியுள்ளன. அவற்றை அகச் சான்றுகளாகக் கருத இயலும்.

*“அறிவிக்க வேண்டாம் அறிவற்று அயர்வோர்க்கும்”*

(திருமந்திரம் 2327)

*“பேரான பதினெட்டுச் சித்தரெல்லாம்*
*பிரபலமாய்ப் பரிபாஷை ஆகச் சொன்னார்”* (இராமதேவர் 400)

போன்ற அகச்சான்றுகளினூடாக சித்தர் பனுவல்கள் பரிபாஷைகளை வேண்டுமென்றே தம்மகத்தில் புதைத்துக்கொண்டன ஆங்காங்கே விதைத்துக் கொண்டன என்கிற யதார்த்தம் புலனாகும்.

**குறிப்பு மொழி**

“பரிபாஷை”யையே தமிழ் இலக்கணத்தில் “குறிப்பு மொழி” என்பர்.

*“எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராதாகிப்*
*பொருட்புறத்ததுவே குறிப்புமொழி என்ப”*

(தொல்காப்பியம்.செய்.179)

நேரடியாக உண்மைப்பொருள் உணர்த்தாது வேறு பொருள் உணர்த்துவதே குறிப்பு மொழி ஆகும். இத்தொல்காப்பிய நூற்பாவை விளக்கும் வகையில் உரையாசிரியராகிய பேராசிரியர் பின்வரும் எடுத்துக்காட்டைத் தந்துள்ளார்.

*“குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி*
*னடக்கிய மூக்கின ராம்”*

“இதனுட் குடமே தலையாகப் பிறந்தாரெனவும் கொம்பெழுந்த வாயினரெனவும் கையுட்கொண்ட மூக்கினரெனவும் கூறியக்கால் எழுத்தும் சொல்லும் பொருளும் இயல்பிலவாதலும் குறிப்பினான் அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறும் கண்டு கொள்க” என்பது எடுத்துக்காட்டு.

**பரிபாஷை பேசியதன் தாற்பரியம்**

அபக்குவமான மனதுடைய மூர்க்கர்கள், அறிவிலிகள் போன்றோரிடத்தில் வீரியமான மூலிகைகள் பற்றிய இரகசியங்கள், காயசித்தி, ரசவாதம் முதலிய சாதனைகள் சிக்கிவிடக்கூடாது என்பதே சித்தர்கள் மறைபொருட் தொனிப்பில் இவற்றைப் பேசியதற்கான காரணமாகும்.

*"சொல்லாதே ஒளித்திட்டார் சித்தரெல்லாம்"*

(அகத்தியர் வைத்திய பரிபூரணம் 400, பா.6)

*"நேர்த்தியடா உலகத்தில் சொன்னாருண்டோ*
*நிசமாகச் சித்தரெல்லாம் மறைத்து வைத்தார்"*

(இராமதேவர், பா.13)

*"முறையது வெளிசொல்லாதே*
*மூடர்க்கு நூல்கொடாதே"* ( அகத்தியர் பரிபாஷை 4.5)

*"வெளிவருமே பரிபாஷை புதையல் தன்னை*
*விதியான வினையாளன் காண்பதல்லால்*
*தெளியாத மூடர்க்கு"* (மூப்புச்சூத்திரம், பா.23)

பக்குவமற்றவர்க்கு சித்தரகசியங்களைத் தெரியப்படுத்துவோர்க்கும் உபதேசிப்போர்க்கும் சித்தர்களின் சாபம் பற்றும் என்ற அச்சுறுத்தல் மட்டுமன்றி அவர்களின் தலை சுக்குநூறாகச் சிதறிப்போகும் என்ற அச்சுறுத்தலும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இது சித்தர்களின் சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடே ஆகும். இதற்குக் கீழ்வரும் அகச்சான்றுகளைச் சுட்டிக்காட்ட இயலும்.

*"தாமிந்த சூத்திரத்தை ஒளியாதீந்தால்*
*தலைதெறித்துப் போகுமடா சத்தியமாய் சொன்னேன்*
*நாமிந்தப் படிசொன்னோம் யோகிக்கீவாய்"*

(அகத்தியர் பூரண சூத்திரம், பா.216)

*"சித்தர்களுக்காகவே இந்நூல் சொன்னேன்*
*சிவயோகி மெய்ஞ்ஞானிக்கு இந்நூல் சொன்னேன்*
*பற்றற்றாய் குருவுக்கு தொண்டு பண்ணி*

*பன்னிரண்டு வருடம் வரப் பாதம் போற்றி*
*கற்றோ மென்றிருந்த கடைப்பிள்ளைக்காகும்*
*கல்வியறிவு உள்ளோர்க்கும் ஈயலாகும்*
*மற்றுள்ளோர்க் கிந்நூலை ஈய்ந்தாயானால்*
*மாண்டிடுவாய் மகத்தான சாபமீதே”*

(அகத்தியர் ரசவாதநூல், பா.251)

### அறிவியல் நோக்குநிலையான கட்டவிழ்ப்புக் குறித்த நியாயிப்பு

படைத்தவன் இல்லாநிலையிலும் அவனது படைப்புப் பிரதியானது காலத்துக்குக் காலம் புதிய புதிய நோக்குநிலையோடு வாசிக்கப்படும். இந்த வாசிப்பின் தளத்தை அது வாசிக்கப்படுகின்ற சமூகத்தின் கூட்டு நனவிலியில் உந்தப்படுகின்ற ஆர்வக்கோளாறுகள் தீர்மானிக்கும்.

இதனை “ஆர்வக்கோளாறு” எனக் குறிப்பிட்டதற்கான காரணம் யாதெனில் பிரதியை வாசிப்பவனின் சமூக மனநிலை, ஒருபோதும் பிரதியை உருவாக்கியவனின் காலதேச பகைப்புலத்தினைக் கவனத்திற் கொள்வதில்லை.

எவ்வாறாயினும் இத்தகைய நிர்த்தாட்சண்ய முயற்சிகள் தொன்மங்களை மறுவாசிப்புச் செய்யும் ஆய்வுமுறைமைகளில் தவிர்க்க இயலாதவை. அந்தவகையில் தற்கால சமூகத்தின் ஆர்வக்கோளாறாக எத்தகைய விடயத்தையும் அறிவியல் நோக்கில் அணுக வேண்டும் என்கிற வேட்கை உள்ளது.

நவீன அறிவியலாளர்களோ ஆய்வு கூடங்களில் நிரூபிக்கப்பட்டு, தேற்றங்களாக விதிகளாக அமையாத எவற்றையும் அறிவியற் கருத் துக்கள் என ஏற்கத் தயாரில்லை. ஆனால் இதில் முரண்நகையாதெனில் பிரபஞ்ச இயற்கையின் உருவாக்கம் குறித்த கருதுகோள்களை இதே நியம அறிவியலால் இற்றைவரை ஆய்வுகூட முறைகளூடாக நிரூபிக்க இயலவில்லை.

இங்கே ஒவ்வொரு பண்பாட்டுக் குழுமத்துக்கும் அது சார்ந்த அறிவியல் மரபு உள்ளது. ஆரியப்பட்டரும் தேரையரும் ஐசக்நியூட்டனையும் கியூரி அம்மையாரையும் போன்ற அறிவியலாளர்களே.

இத்தகையதோர் முரண்வெளிக்குள் நின்றுகொண்டே சித்தர் பனுவல்களினை அறிவியல் நோக்குநிலையில் கட்டவிழ்ப்புச் செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் சித்தர் பனுவல்களில் பொதிந்துள்ள அனேக கருத்தியல்கள் அறிவியல் கருத்தோட்டம் தோய்ந்தவை.

இன்னுமொரு தளத்தில் நோக்கில் சித்தர்கள் ஆன்மிகத்தையும் பக்தியையும் மட்டும் தமது பனுவல்களின் பொருண்மைகளாய் கொண்டிருக்கவில்லை. மருத்துவம், உடற்கூற்றியல், இரசவாதம், வேதியியல், வர்மக்கலை என அவர்கள் சஞ்சரித்த பாடுபுலங்கள் பலதும் அறிவியற் புலங்களே. எனவே அறிவியல் நோக்கில் சித்தர் பாடல்களை அணுகவேண்டியது அவசியமானது மட்டுமின்றி அதுவே தர்க்கப் பொருத்தமுடையதுமாம்.

எவ்வாறாயினும் ‘பாம்பென்று மிதிக்கவோ பழுதையென்று கடக்கவோ முடியாத’ மருட்சி சித்தர் பனுவல்களை அறிவியற் கண்ணோட்டத்தில் கட்டவிழ்க்க முனையும் அனைவருக்கும் ஏற்படும். இது தவிர்க் கொணாதது.

## “சித்தர்” – சொற்பொருள் விளக்கம்

பழந்தமிழ் இலக்கியப்பரப்பிலே “சித்தன்” என்ற சொல் முதன்முதலில் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.

> *“....... உடம்பிடை உயிர்கள் அறிவன் அறிவு*
> *வரம்பிகந்தோன் செறிவன் சினேந்திரன் சித்தன்”*
> *“தத்துவன் சாதுவன் சாரணன் காரணன் சித்தன்”*

இதில் இடம்பெற்றுள்ள சித்தன் என்ற சொல்லுக்கு ‘கிருத கிருத்தியன்’, ‘செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்தவன்’, ‘கன்மங்களைக்

கழுவினவன்', 'எண்வகைச் சித்துக்களையும் உண்டாக்கியவன்' என்றவாறு அடியார்க்கு நல்லார் தனது உரையில் பொருள் கொண்டுள்ளார்.

(சிலப்பதிகாரம் புகார்க்காண்டம், 10, நாடுகாண்காதை, 9)

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள,

*"மறுவில் செய்தி மூவகைக் காலமும்*
*நெறிய ஆற்றிய அறிவன்"*

(தொல்காப்பியம் புறத்திணையியல். 20)

எனும் நூற்பாவில் இடம்பெறும் "அறிவன்" என்ற சொல் சித்தரைக் குறிக்கும் என நச்சினார்க்கினியார் தனது உரையில் குறிப்பிட்டுள்ளமையும் நோக்கற்பாலது.

*"காமம் வெகுளி மயக்கம் இல்லாத*
*ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வும்*
*என்னும் மூவகைக் காலத்திலும்*
*வழங்கும் நெறியான் அமைத்த*
*முழுதுணர்வுடையோன் - கலசயோனியாகிய*
*அகத்தியர் முதலியோரும் அறிவர் என்றுணர்க"*

(தொல்காப்பியம், நச்சினார்க்கினியார் உரை)

## "சித்தன்" பற்றி சித்தர் பாடல்களில் இடம்பெற்ற அகச்சான்றுகள்

*"சிந்தை தெளிந்திருப்பவன் ஆர் அவனே சித்தன்"*

(வான்மீகர் சூத்திர ஞானம், 2)

*"யோகச் சமாதி உகந்தவர் சித்தரே"* (திருமந்திரம், 1490)

*"பேராம் பிரமானந்தம் அடைந்தோன் சித்தன்*
*சூரான வாசி மறித்தவனே சித்தன்"*

(கோரக்கர் பிரம ஞான தரிசனம், 2)

*"சிந்தையில் களங்கமற்றோன் சித்தன் ஆவான்"*

(அகத்தியர் நூறு, பா.50)

*“எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி
ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்”*

(சட்டைமுனி ஞானம் 100, பா.56)

(அதாவது பிறவிதோறும் தொடர்ந்துவரும் வாசனாமலமாகிய கன்ம வினை தன்னைத் தொடராமல் தடுப்பவன் சித்தன்)

*“சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்”*

(அகத்தியர் ஞானம், பா.75)

இவைமூலமாக மெய்ஞ்ஞான முனைவர்கள் எல்லோரையும் குறிக்கின்ற பொதுப்பெயராகச் “சித்தர்” என்ற பதம் அமைந்துள்ளமை புலனாகின்றது. ஆயினும் மருத்துவம், யோகம், தாந்திரிகம், இரசவாதம், வர்மம் முதலிய அறிவுப்புலங்களில் துறைபோன சாதனையாளர்களாகத் திகழ்பவர்களைச் சுட்டுவதற்குச் சிறப்பாக பயன்படுத்தப்பட்ட சொல்லாகவும் இதனைக் கருத இயலும்.

### அறிஞர்கள் கொடுத்த சில விளக்கங்கள்

“கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றால் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்” - தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (தமிழ்க் கலைக்களஞ்சியம் (சித்தர்)

“பக்தி நெறியின்றி வேறு நெறியால் கடவுளைக் கண்டு தெளிந்து இருவினையொப்பு நிகழுங்காலும் உடலோடு உலாவுவோர் சித்தர்” - மு.அருணாசலம்

“அந்தக்கரணங்கள் நான்கில் ஒன்றான சித்தத்தை வென்றவர்களே சித்தர்கள்” - டாக்டர் இரா.மாணிக்கவாசகம்

“சித்து எனப்படும் இயற்கை மீறிய ஆற்றல் கைவரப்பெற்றவர்கள். சித்துக்கள் கைவரப் பெறுவதில் நிறைவு காணாமல் அதற்கும் அப்பாலான பூரணநிலை நாடியவர்களே சித்தர்கள்” - பேராசிரியர் க.நாராயணன் (நாராயணன்,க.2003:48)

“சித்தர்கள் யார் என்ற கேள்விக்கு ஒரே வரியில் பதில் சொல்வதென்றால் சித்திகளைக் கைவரப் பெற்றவர்களே சித்தர்கள். மூவகைச் சித்திகளான கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்திகளைப் பெற்றுக்கொண்டு வெட்ட வெளியில் கலந்து நிறைந்தவர்கள் சித்தர்கள்”- ப.சு.மணியன்- (மணியன்,ப.சு.:2004:11)

அறிதிறன், ஆசை, செயல் ஆகிய முக்கூறுகளைக் கொண்ட தன்னிலைத்தான அல்லது சுயாதீனமான தொகுதியைச் சித்தம் என தற்கால உளவியலாளர்கள் குறிப்பிடுவர். இம்மூன்று கூறுகளும் ஒன்றிலொன்று கூட்டிணைவாகவே செயற்படுகின்றன. தனித்துச் செயல்படுவதில்லை. இது ஒருவகையில் ஓய்வில்லாத உணர்வோட்ட மாகும். இதனையே புராதன யோகசாஸ்திரங்கள் ‘சித்த விருத்தி’ எனச் சுட்டியுள்ளன.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணங்கள் பற்றி உளவியல் மருத்துவர் என்ற வகையில் Dr.T.ஆனந்தன் அவர்களின் கருத்து பின்வருமாறு அமைகிறது.

> “அறிதிறனும் செயலும் கலந்த நிலையை மனம் எனலாம். அறிதிறனும் ஆசையும் கலந்த நிலையை அகங்காரம் எனலாம். அறிதிறனும் தன்னைத்தானே ஆராயும் நிலையும் உடையதைப் புத்தி எனலாம். அறிவு, ஆசை, செயல் ஆகிய மூன்றின் கூட்டினைச் சித்தம் என்பர். எந்த ஒன்றும் தனித்துச் செயற்பட முடியாத வண்ணம் மூன்றும் கலந்தே செயல்படுகின்றன.” (Anandan, T:1996:16)

இந்து மெய்யியல் நோக்குநிலையிலும் சித்தம் என்பது ஓய்வில்லாத உணர்வோட்டம் ஆகும். இந்த உணர்வோட்டத்தை யோகம், தியானம் முதலிய ஆன்மிக சாதனைகளால் படிப்படியாகக் கட்டுப்படுத்தி சித்த விருத்தியை அடக்கிச் “சும்மாயிருத்தலின்” சூட்சுமத்தைத் தெரிந்தவர்களே சித்தர்கள் ஆவர்.

**சித்தர்களின் மரபும் – வகைப்பாடும்**

பாரததேசத்தில் காலத்துக்குக் காலம் பலப்பல சித்தர்கள் தோன்றி யிருப்பினும் நிலவியல் ரீதியாகச் சித்தர் மரபினை பின்வருமாறு இரு வகைப்படுத்தி நோக்குவர்.

1. நவநாத சித்தர் மரபு
2. பதினெண் சித்தர் மரபு

நவநாதர் சித்தர் மரபானது சத்திய நாதர், சகோத நாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளி நாதர், மதங்கநாதர், மச்சேந்திர நாதர், கடேந்திரர், கோரக்கநாதர் என ஒன்பதின்மரைச் சுட்டுவதாகும். இவர்களை இரசசேகர சித்தர்கள், நாதசித்தர்கள், நவகோடி சித்தர்கள் என்றும் கூறுவர். நவநாத சித்தர் மரபானது நிலவியல் ரீதியாகத் தக்கண பீடபூமிக்கு வடபால் அதாவது வடஇந்திய மரபுக்குரியதாகக் கருதப்படும். (மணியன், இரா:1978:3)

பதினெண் சித்தர் மரபு தென்னிந்தியாவுடன் குறிப்பாகத் தமிழகம், கேரளா ஆகியவற்றுடன் தொடர்புடையது. இவர்களை வித்தகச் சித்தர்கள், மகேஸ்வர சித்தர்கள், மூலவர்க்கச் சித்தர்கள் ஆகிய சிறப்புப் பெயர்களினால் சுட்டினர்.

அகத்தியரை முதற்கொண்டும் திருமூலரை முதற்கொண்டும் பதினெண் சித்தர்களைச் சுட்டும் மரபு உண்டு. இப்பதினெண் சித்தர்களின் பனுவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த நினைவுப்பேருரை அமைகிறது.

**மனித உடற்கூற்றியல்**

ஆகாசம் - காற்று - நெருப்பு - நீர் - நிலம் எனப் பஞ்ச பூதங்களின் தோற்றக்கிரம ஒழுங்கிலேயே எமது உடலின் உற்பத்தியும் அமைகிற தென்பர். இதனை உடலின் ஆதாரச் சக்கரங்களுடன் தொடர்புபடுத்துவர். மண் கூறாகிய மூலாதாரச் சக்கரத்திலிருந்து மேற்கிளம்பி ஆக்ஞா சக்கரத்துக்கு அப்பால் ஆகாச தத்துவத்தினை அடைய முயலும்

யோகிக்கு பிரபஞ்சத்தின் பேராற்றலுடன் (பேரியற்கை) தொடர்புறவல்ல தன்மை உண்டாகிறது. இந்த அண்ட பிண்ட இணைப்பை “குண்டலினி” ஆற்றல் மூலம் சாத்தியப்படுத்தலாம். குண்டலினி என்பது பிரபஞ்ச ஆற்றலின் மிகச்சிறிய மாதிரி வடிவமாக உடலினுள்ளே தங்கியுள்ள ஆற்றலாகும். இதனை அடிப்படையாக வைத்தே சித்த மருத்துவ அறிவியலும் சித்தர்கள் விபரிக்கும் உடற்கூற்று விளக்கமும் விரிந்து பரந்துள்ளன.

## ஆறு ஆதாரங்கள்

மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களை உடலையும் மனதையும் இயக்குகின்ற உயிர் ஆற்றல் மையங்களாக (Psychic centers) அண்மைக்கால யோக அறிவியல் ஆய்வுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

“மனித உணர்வு நிலையின் மையங்கள் மூளை - தண்டுவட அமைப்பிலும் (Cerebra Spiral System) பெருமூளையிலும் (Cerebrum) காணப்படு கின்றன. கருத்தரித்தவுடன் உருவாகின்ற முதற்பகுதி இந்த மூளை - தண்டுவட அமைப்பே என்பதும் கவனித்தற்பாலது. இதிலிருந்தே முழு உடலமைப்பும் உருக்கொள்கிறது. இந்த மூளை-தண்டுவட அமைப்பே மின்னாற்றலை (Bio-Current) உற்பத்தி செய்யக்கூடிய கருவியாகவும் இணைப்பான்களாகச் செயற்படும் நரம்புகளின் அருமையான வலைப் பின்னலாகவும் விளங்குகிறன்றது. பெருமூளையால் தொடர்ந்து உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றல் நுண்ணிய நரம்புகளின் மூலம் பரவி உயிர் வாழ்வதற்கான ஆற்றலை (Life Force) உயிரினத்திற்கு அளிக்கின்றது. இதனையே குண்டலினி ஆற்றல் என்பர். கபாலத்தின் பின்புற அடிப்பாகத்தில் அமைந்துள்ள சிறுமூளை (Cerebellum) தொழிற்படு மூளையாக விளங்குகின்றது. முழுமனித உடலின் செயற்பாடும் மூளை-தண்டவட அமைப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ் வமைப்பிலேயே ஆறு ஆதாரங்கள் எனப்படும் ஆற்றல் மையங்கள் அமைந்துள்ளன. (Harish,J., 1987:5-6)

இந்த ஆறு ஆதாரங்களைப் பற்றிய பிரக்ஞை மனிதனுக்கு இருந்தாலும் அன்றி இல்லாதிருப்பினும் அவை இயங்கிய வண்ணமே இருப்பதாகவும்

அவற்றின் ஊடாக இயங்கும் ஆன்ம ஆற்றலானது பலவிதமான ஆன்மநிலை மாற்றங்களைத் தோற்றுவித்துக் கொண்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது. இம்மாற்றங்களை நாளமில்லா சுரப்பிகளால் உடலில் ஏற்படும் வேதியியல் மாற்றங்களாக (Chemical changes) நவீன அறிவியலாளர் இனங்காண்பர். (Harish,J., 1987:1)

### குண்டலினி

சித்தர் பனுவல்களில் குண்டலினியுடன் தொடர்புடைய அனேக விடயங்கள் பரிபாஷைகளால் சுட்டப்படுவனவாகவே இடம்பெற்றுள்ளன. காயசித்தி ரகசியம், கற்பதேகம், பரகாயப்பிரவேசம், அட்டமா சித்திகள் என சித்தர் மெய்யியலின் தனித்துவமான பரிமாணங்கள் யாவற்றுக்கும் குண்டலினி பற்றிய கருத்தியல் அடிப்படையாக அமைந்தமையே இதற்குக் காரணமெனலாம்.

குண்டலினி என்பது ஒளி - வெப்பம் மிகுந்த பேராற்றல் ஆகும். இது ஒருவகை மீநுண் ஆற்றலாக விபரிக்கப்படுகிறது. பிரபஞ்சத்தின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்த மூலத்தாது இதுவாகும். இந்த மூல ஆற்றலே பௌதிக உடலுக்குள்ளும் இருந்து அதன் லௌகிக நாட்டங்களுக்கு ஏதுவாகின்றது. பிரபஞ்ச ஆற்றலின் மாதிரி வடிவமாக ஒவ்வொரு மனித உடலிலும் இருப்பதே குண்டலினி ஆற்றலாகக் கருதப்படுகிறது.

"அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உண்டு" என்கிற சட்டைமுனி வாக்கிற்கமைய அண்ட உற்பவிப்புக்கும் பிரபஞ்ச இயற்கையின் விரிவுக்கும் மூலத்தாதுவாகக் கருதப்படும் குண்டலினியே மனித உடலினுள்ளும் இருந்து இனவிருத்திக்கான ஆற்றலாய் அல்லது காம ஆற்றலாய் தொழிற்படுகிறது.

*"அண்டத்துக்கு அப்பால் அகன்ற சுடரினைப்*
*பிண்டத்துள் பார்ப்பாயடி குதம்பாய்"*

(குதம்பைச்சித்தர், பா.9)

### குண்டலினி சொற்பொருள் விளக்கம்

குண்டலினி என்றால் "சுருண்டது" என்று பொருளுண்டு. அந்தவகையில் மூன்றரைச் சுருள் வடிவில் தனது வாய்க்குள் வாலிருக்கும் வண்ணம் கீழ்நோக்கிய முகத்துடன் உறங்கும் பாம்பாகக் குண்டலினி ஆற்றல் உருவகிக்கப்பட்டுள்ளது. (சிவானந்தா,ஸ்ரீ:2006:4)

### சித்தர் பரிபாஷைகளில் குண்டலினி

சித்தர் பனுவல்களில் வாலை, காமி, கண்ணம்மா, பாம்பு, கன்னி, மௌனி, குதம்பை, வானுதிரம், வாமி, வாணி, பால், குண்டலிப்பால் முதலிய பரிபாஷைகளால் குண்டலினி சுட்டப்படுகிறது.

இது ஒரு மின்சாரப் பொறியைப் போல ஒளி, வெப்ப ஆற்றலாகக் கருதப்படுவதால் மூலக்கனல் என்றும் மனித உடலில் குண்டலினியின் இடஅமைவு கருதி "இடுப்படியில் எரிந்திடும் அடுப்பு" என்றும் சித்தர் பாடல்களில் சுட்டப்பட்டுள்ளது.

### உடலில் குண்டலினியின் அமைவிடம்

இடை, பிங்கலை நரம்புகள் முதுகெலும்பின் சுழுமுனையில் சந்திக்கும் முதல் சந்திப்பே மூலாதாரமாகும். (Pelvic Plexus) இதுவே குண்டலினியின் இயல்பான இருப்பிடமாகும்.

*"எருவிடும் வாசற் கிருவிரல் மேலே*
*கருவிடும் வாசற் கிருவிரல் கீழே*
*உருவிடும் ஜோதி"* (திருமந்திரம், பா.565)

அதாவது ஆசனவாய்க்கு இரண்டு விரற்கடை அளவு மேலாகவும் இனப்பெருக்க உறுப்புக்கு இரண்டு விரற்கடை கீழாகவும் உள்ள இடமே குண்டலினியின் இருப்பிடமாகும். மூலாதாரத்தில் குண்டலினி மூலக்கனலாக இருப்பதனை,

*"முக்கோண வட்டக் கிணற்றுக்குள்ளே*
*மூல மண்டல வாசிப் பழக்கத்திலே*

*அக்கோண வட்டச் சக்கரத்தில்*

*வாலை அமர்ந்திருக்கிறாள்"* (கொங்கணச்சித்தர், பா.06)

எனக் கொங்கணச்சித்தர் பாடியுள்ளார்.

### குண்டலினியை விழிப்புறச்செய்தல்

லௌகீக ஆற்றலாய் விரயமாகின்ற குண்டலினியை ஆன்மிக ஆற்றலாய் மடைமாற்றம் செய்தலே குண்டலினி விழிப்பு அல்லது குண்டலினியின் மேல் ஏற்றம் என்பர். இதற்கு யோகசாதனை பிரதான வழிமுறையாக உள்ளது.

மூலாதாரத்தில் காம ஆற்றலாய் கனன்று கொண்டிருக்கும் குண்டலினியை நடுநாடி எனப்படும் சுழுமுனையூடாக மேலேற்றுவதில் இடைகலை, பிங்கலை, ஆறு ஆதாரங்கள், சுழுமுனை ஆகியவை நேரடியாகத் தொடர்புறுகின்றன.

*"மெல்லக் கனலை எழுப்ப வேண்டும்*

*வீதிப்புனலில் செலுத்த வேண்டும்"* (பாம்பாட்டிச்சித்தர், பா.115)

இங்கே வீதிப்புனல் என்பது திரவங்களைச் சிந்தாது பரிமாற்றுவதற்குப் பயன்படும் புனல் (ஒருவகை உபகரணம்) போன்ற வடிவத்தையுடைய சுழுமுனையைச் சுட்டும். சுழுமுனையின் நீட்சித்தன்மை பற்றி "வீதி" என்றார். (விட்டு வீதி என்ற கிராமிய வழக்கு விசாலம், நீட்சியைக் குறித்தது)

"குண்டலினி சக்தி ஒரு பாம்பின் வடிவில் முதுகுத் தண்டின் கீழ் மூன்றரைச் சுருளாக முறுக்கிக் கொண்டிருக்கிறது. அதனை யோகப் பயிற்சிகளால் விழிப்புறச் செய்யலாம். குண்டலினி சக்தி கீழே இருந்து மேற்புறமாக சிரசிற்கு மூளையிலுள்ள "மெடுல்லா ஒபிளங் கேற்றா" (Medulla oblongata) உள்ள பகுதி ஊடாகச் செல்கிறது.

குண்டலினி விழிப்புற்றவுடனே தடியால் அடிபட்ட பாம்புபோல் நிமிருகிறது. இது ஆதாரச் சக்கரங்கள் வாயிலாக அசைந்து மேலே ஏறி வரும்." (இராமநாதன்,பொன்., 2009:132)

*"ஆலடிப் பொந்தினில் வாழ்ந்த பாம்பே*
*அரசடிப் பொந்தினில் புகுந்து கொண்டாய்*
*வாலடி தன்னிலே பார்த்துப் பார்த்து*
*வாங்கியே தூங்கிநின் றாடாய் பாம்பே"*

(பாம்பாட்டிச்சித்தர், பா.83)

என்ற பாம்பாட்டிச்சித்தர் பாடல் இக்கருத்தமைவை நன்கு பிரதிபலிக்கிறது. மூலாதாரத்தில் காம ஆற்றலாய் கனன்று கொண்டிருக்கும் குண்டலினியை 'ஆலடிப் பொந்தினில் வாழ்ந்த பாம்பே' என்ற பரிபாஷை சுட்டுகிறது. ஆலிலை - யோனி - முக்கோணத்தின் குறியீடாகும். அரசடிப் பொந்து என்பது பிரம்மநாடி ஓடுகின்ற தண்டுவடத்தின் சுழுமுனையைச் சுட்டுகிறது. பிரம்ம நாடியினையே அத்தாணிக்கால், நடுவுக்கால், துலாக்கோல், பிரம்மதண்டு முதலிய பரிபாஷைகளாலும் சித்தர்கள் சுட்டினர். (இராமச்சந்திரன், எஸ். பி:1997:25.),

*"நாட்டுக்கால் இரண்டும் விட்டு நடுவுக்கால் ஊடே போய்*
*ஆட்டுக்கால் இரண்டினுள்ளே அமர்ந்திருப்பதெக்காலம்"*

(பத்திரகிரியார், பா.142)

இங்கே நாட்டுக்கால் என்பதில் வரும் "கால்" காற்றைச் சுட்டும். அதாவது வலது இடது சுவாசங்களுடன் தொடர்புடைய சூரியநாடி, சந்திரநாடி ஆகியவற்றைக் குறிப்பால் உணர்த்தியதாகவே "நாட்டுக்கால் இரண்டு" அமைகிறது. "நடுவுக்கால்" என்பது இவற்றின் நடுவே அமைந்த நடுநாடி ஆகிய சுழுமுனையைக் குறிக்கும். இதனையே பிரமதண்டு, வீணாதண்டு என்ற பரிபாஷைகளாலும் சித்தர்கள் சுட்டுவர்.

**பால் கறத்தல்**

குண்டலினி யோகசாதனையுடன் தொடர்புடைய பிறிதொரு சித்தர் பரிபாஷையாக "பால் கறத்தல்" என்ற தொடர் அமையப் பெற்றுள்ளது. மூலாதாரத்திலிருந்து நடுநாடி எனப்பட்ட சுழுமுனை (இதனையே பிரம்ம தண்டு, மூங்கிற்கழி, வீணா தண்டு, அக்கினிக்கம்பம் முதலிய பரிபாஷைகளினால் சித்தர் பனுவல்கள் சுட்டியுள்ளன) ஊடாக யோக சாதனை மூலமாக ஏறி வருகின்ற குண்டலினி ஆறு ஆதாரங்களையும்

வெற்றிகரமாகக் கடந்து ஏழாவதாக சிரசில் உள்ள சகஸ்ர தளத்தில் நுழைந்து அங்குள்ள சில சுரப்பிகளில் அபரிதமான செயற்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் அனுபவிக்கின்ற ஒருவகை பரம ஆனந்த அனுபவத்தையே சித்தர்கள் "பால் கறத்தல்", "குண்டலினிபால் குடித்தல்" முதலிய பரிபாஷைகளுடாக வெளிப்படுத்தியுள்ளனர்.

*"மாங்காய்ப் பால் உண்டு மலைமேல் இருப்பவர்க்கு*
*தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய்.........."*

(குதம்பைச்சித்தர், பா.28)

இங்கே மலை என்பது சிரசைக் குறித்தது. மாங்காய்ப் பால் உண்டு என்பதனை 'மங்காப் பால் உண்டு' எனப்பொருள் கொள்ள வேண்டும். இது என்றும் மேன்மை கெடாத சிரசேறிக்கலந்த குண்டலினியைச் சுட்டும். தேங்காய்ப்பால் என்பதனை தேங்காப்பால் எனப்பொருள் கொள்ள வேண்டும். தேங்காமல் வீணாவது மூலாதாரத்தில் காம ஆற்றலாய் வீணாகும் குண்டலினியை இது சுட்டியது.

இடைக்காட்டுச் சித்தரின் பாடல்களில் இத்தகைய "பால் கறத்தல்" பரிபாஷை அதிகளவில் பயின்று வந்துள்ளது.

*"சாகாதிருந்திடப் பால்கற*
*சிரந்தன்னில் இருந்து பால்கற"* (இடைக்காட்டுச்சித்தர்)

*"மாறதொழுகிடும் பால்கற*
*மண்டையில் வளரும் பால்கற"* (இடைக்காட்டுச்சித்தர்)

பத்திரகிரியார் இதனை,

*"மூலநெருப்பை விட்டு முட்டுநிலா மண்டபத்தில்*
*பாலை இறக்கி உண்டு பசி ஒழிவது எக்காலம்"*

(பத்திரகிரியார், மெய்ஞ்ஞானப் புலம்பல், பா:95)

என்கிறார்.

நவீன அறிவியலில் Gut-Brain axis எனப்படும் கருத்தாக்கம் அடிவயிற்றை இரண்டாவது மூளை என்கிறது. இங்கிருந்து மூளைக்கும் மூளையிலிருந்து அடிவயிற்றுக்கும் இடைவிடாத நுண்ணுயிர்மத் தகவல் பரிமாற்றம் இடம்பெறுவதனை விளக்குகிறது.

**பதினெட்டுக் கலசம் – அகஞ்சுரப்பிகள்**

சித்தர் இலக்கியங்களில் "பதினெட்டுக் கலசம்", "பாத்திரம் பதினெட்டு" முதலிய பரிபாஷைகளினால் மனித உடலிலுள்ள அகஞ்சுரப்பிகள் சுட்டப்படுகின்றன.

*"இன்புற்று இருவர் இசைவித்து வைத்தமண்*
*துன்பக் கலசம் ...................."*
*ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு*
*வெந்தது சூளை"*

(திருமந்திரம், 2ஆந் தந்திரம். கர்ப்பக்கிரியை, பா.468)

*"விதியிட்டவாறே வேகாத பாண்டத்துள்*
*பதினெட்டுக் கலசம் பாங்காய் நீர் சுரந்து"*

(உரோமரிஷி, பா.09)

*"பாண்டத்துள் இட்ட பதினெட்டுக் கலசம்"*

(தேரையர் நோயணுகாவிதி, பா.21)

பதினெட்டுக் கலசம் என அகஞ்சுரப்பிகள் பொதுப்பெயரால் சுட்டப்படினும் இவை பதினெட்டுக்கும் சிறப்புப் பரிபாஷைகளையும் சித்தர் இலக்கியங்கள் வழங்கியள்ளன. அவை பின்வருமாறு,

| அகஞ்சுரப்பி | சித்தர் பரிபாஷை | எண்ணிக்கை |
|---|---|---|
| ♦ பியூட்டரின் | சிகாமணி | 01 |
| ♦ பீனியல் | ஞானமணி | 01 |
| ♦ ஹைபோதலமஸ் | அமுதகலசம் | 01 |
| ♦ தைரோய்ட் | கண்டாமணி | 02 |
| ♦ பராதைரோய்ட் | நாவுமணி | 02 |
| ♦ தைமஸ் | பிள்ளைச்சிட்டான் | 01 |
| ♦ கல்லீரல், மண்ணீரல் | - | 02 |
| ♦ கணையம், பித்தப்பை | - | 02 |
| ♦ அட்ரீனல் | தலைப்பட்டி | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| ♦ புரஸ்ரேற் | - | நீரேத்தம் | - | 01 |
| ♦ ரெஸ்ரிஸ் | - | விதைகள் | - | 02 |
| ♦ கொனாட்ரேட் | - | விந்தேத்தம் | - | 01 |

(சம்பங்கி ஞானசோதி:2002:127-128)

**பிட்யூட்டரி சுரப்பி – சிகாமணி**

மூளையின் ஹைபோதமஸ் பகுதியில் உள்ளது. மூளையின் அடிப்புறத்தில் ஸ்பீனாய்ட் (Spehenoid) எனும் எலும்புப் பள்ளத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

1. அடினோ ஹைப்போபைசிஸ் (முன் பிட்யூட்டரி)
2. நியூரோ ஹைப்போபைசிஸ் (பின் பிட்யூட்டரி)

என இரண்டு கதுப்புக்கள் உள. பார்வைக்கு சிறிய பட்டாணிக்கடலை/ நெல்லிக்காய் போல் தோற்றமளிக்கும் (1cm நீளம், 1.5cm அகலம், 0.5cm கனம், 0.5g நிறை) இச்சுரப்பியே கானில் சுரப்பிகள் யாவற்றிலும் அளவில் சிறியது. ஆயினும் இதுவே கானில் சுரப்பிகள் யாவற்றுக்கும் தலைமைச் சுரப்பியாகும். இதனால் ஆங்கிலத்தில் இதனை "Master Gland" என்பர். (https://www.msdmanuals.com/home/hormonal-and-metabolic-disorders/pituitary-gland-disorders/overview-of-the-pituitary-gland)

நினைவாற்றல், தன்னம்பிக்கை, பார்க்கும் திறன், செவிமடுக்கும் திறன், உடலின் உயரம், கருவளம் முதலிய அனேக விடயங்களைத் தீர்மானிக்கின்ற தலைமைச் சுரப்பியாக இது அமைந்துள்ளதனால் இதனை நாளமில்லாச் சுரப்பிகளின் நடத்துனர் என்பர். ஆளுமைச்சுரப்பி எனப்படும் தைரோய்ட்டையும் இதுவே நெறிப்படுத்துகிறது. இதனாலேயே சித்தர்கள் தலைமைக்குரியது என்ற பொருளில் "சிகாமணி" என்று சுட்டினர். இச்சுரப்பியினை,

> *"நீரின்றிப் பாயும் நிலத்திற் கரும்பச்சை*
> *வேரிற் பழுத்த விளநெல்லியொன்றுண்டு"*

(அகத்தியர் பரிபாஷை, பா.32)

*"நெற்றியுள் தயங்குகின்ற நீலமாம் விளக்கினை*
*உற்றுணர்ந்து பாரடா*
*பத்தியில் தொடர்ந்தவர்*
*பரமயம் அதானவர்"* (சிவவாக்கியர்)

இதன் குறைபாட்டால் Dwarfism எனப்படும் குள்ளத் தோற்றமும் அதிகம் சுரப்பின் Gigantism எனப்படும் அபரிதமான வளர்ச்சியும் உடலில் அமையும்.

மேதைகள், ஞானிகள், கவிஞர்கள் போன்ற ஆளுமைகளின் உருவாக்கத்தில் இச்சுரப்பியின் வகிபங்கு முக்கியமானது.

மரத்தில் பழம் தொங்குவது போல மூளையில் சிறிய நெல்லிக்கனி போல தொங்கிக்கொண்டுள்ள இச்சுரப்பியினை

*"விளையாடிக் கருநெல்லி பறித்தே உண்ணு*
*வேகாத தலையாகும் விரும்பிப்பாரு*
*மலையாமல் வெண்சாரை பிடித்தே உண்ணு*
*மைந்தனே சாகாக்கால்*
*அதுவேயாகும்"* (காகபுசுண்டர், பா.28)

எனக் காகபுசுண்டர் பரிபாஷையினால் உணர்த்தியிருப்பக் காணலாம். இங்கே "விளையாடி" என்பது யோகப்பயிற்சியினைச் சுட்டும். "வெண் சாரை" என்பது மூலாதாரத்திலிருந்து மேலெழுப்பப்பட்ட குண்டலினி ஆகிய பாம்பாற்றலைச் சுட்டும்.

பிட்யூட்டரின் சுரப்பியே கானில் சுரப்பிகளை மூளையின் மைய நரம்பு மண்டலத்துடன் தொடர்புபடுத்தும் முக்கிய மையமாகத் திகழ்கிறது. இதனை Neuroendocrine axes என உடற்கூற்று அறிவியலாளர்கள் சுட்டுவர். பிட்யூட்டரின் சுரப்பியின் பின்கதுப்பாகிய நியூரோ ஹைபோபைசிஸ் (Neurohypophysis) பகுதியிலிருந்தே ஒக்ஸிரைசின் (Oxytocin), வசோபிரசின் (Vasopressin) ஆகிய இரண்டு முக்கிய ஓமோன்கள் சுரக்கின்றன. (https://www.healthline.com/human-body-maps/pituitary-gland#anatomy-and-function)

இவற்றில் ஒக்ஸிரைசின் மகிழ்ச்சி ஓமொன்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தாம்பத்திய உறவின் திருப்தி, தாய்சேய் பந்தம், அரவணைப்பில் மகிழ்ச்சி, அங்கீகரிப்பு அல்லது பாராட்டுதலில் கிடைக்கும் மகிழ்ச்சி உணர்வு என்பவற்றுடன் இது தொடர்புடையது.

**ஒக்ஸிடோஸின் சேமிப்பில் பிட்யூட்டரின்**

காதல் ஹோர்மோன் எனப்படுவது ஒக்ஸிடோஸின் ஆகும். முத்தம், தழுவுதல், காதல் நெருக்கம் மட்டுமன்றி குழந்தைப்பேறு, குழந்தைப் பேற்றுக்குப் பின்னரான பாலூட்டற் செயன்முறையிலும் இதுவே செல்வாக்குச் செலுத்துகிறது. ஒக்ஸிடோஸின் ஆண்களை விடவும் பெண்களுக்கு அதிகம் சுரக்கிறது. (Navneet,M., Sanjay K:2011)

இது காதலுணர்வை மட்டுமன்றி தன்னம்பிக்கை, பக்திப்பரவசம், பாசம், நட்பு, கருணை முதலிய உணர்வுகளையும் தூண்டவல்லது. இந்த உறவுகளில் இடைவெளிகள் தோன்றும்போது ஏற்படும் பதற்றம், கிளர்ச்சி முதலியவற்றுக்கும் இதுவே அடிப்படை.

இந்த ஹோமோன் மூளையின் ஹைபோதலமஸில் உற்பத்தியாகி பிட்யூட்டரி சுரப்பியினால் சேமிக்கப்பட்டு குருதிச்சுற்றோட்டத்தில் விடுவிக்கப்படுகிறது. அந்தவகையில் "சிகாமணி" எனப்படுகின்ற பிட்யூட்டரி சுரப்பி சிற்றின்பத்தைப் பேரின்பமாக மடைமாற்றம் செய்யவல்ல சூட்சுமத்தினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

*"எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளை*
*தெருளாத கன்னி தெளிந்திருந்து ஓத*
*மலராத பூவின் மணத்தின் மதுவை*
*பிறவாத வண்டு மணமுண்ட வாறே"* (திருமந்திரம், பா.2885)

சித்தர்கள் சீவன் முக்தர்கள் (பிறவாத வண்டு போன்றவர்கள்) ஆனவர்களாதலால் சகஸ்ரதளமாகிய மலராத பூவில் சிற்றின்ப உணர்வை யோகசாதனையால் மடைமாற்றஞ் செய்து பேரின்ப உணர்வை மாந்தியிருப்பவர்கள். இந்த மடைமாற்றம் குண்டலினி யோகத்தால் ஏற்பட்டது.

வேதங்கள் முதலிய அனைத்து ஞானத்தையும் வாலையாகிய குண்டலி தெளிவிப்பாள் என்ற பொருண்மையில் மேற்படி திருமந்திரப் பாடல் அமைந்திருப்பதும் நோக்கற்பாலது. மடைமாற்றத்தைக் குறிப்பால் உணர்த்தும் வகையில் பாடலில் முரண் அணி பயன்படுத்தப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

**பீனியல் சுரப்பி – ஞானமணி**

பீனியல் சுரப்பி மூளையின் கார்பஸ் கலோசத்தின் அடியில் அமைந்துள்ளது. பெரு மூளையானது (Cerebrum) நீள்வட்டமுகமாக வலது மற்றும் இடது என இரு புடைப்புக்களாக ஒரு ஆழமான பிழவு மூலமாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இந்த ஆழமான பள்ளம் அல்லது பிழவினை செரிப்ரல் ஹெமிஸ்பியர் (Cerebral Hemispherer) என்பர்.

பீனியல் சுரப்பி இந்த இரண்டு புடைப்புக்களின் இடையே காணப்படுகிறது. ஓர் அரிசி மணியின் அளவே உள்ளது. (5-8mm) இதன் வடிவத்தினடிப் படையில் கூம்புருவச்சுரப்பி அல்லது பைன் வடிவச்சுரப்பி எனவும் அழைப்பர். ("Pineal (as an adjective)". Online Etymology Dictionary, Douglas Harper. 2018. Retrieved 27 October 2018.)

இதன் கலங்களுக்கிடையில் கல்சியம் அயனிகள் காணப்படும். இவற்றையே Brain Sand or Pineal Sand என்பர். இவையே பீனியல் சுரப்பியின் முக்கிய ஹோர்மோனாகிய மெலடோனினைச் சுரப்பனவாம்.

மூளை மணற்றுகள்கள் எனப்படும் இக்கல்சிய அயனிகள் பிரபஞ்சக் கதிர்வீச்சை (Cosmic rays) உணரும் தன்மையினவாக உள்ளன என்பதனையும் தற்போது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஏறக் குறைய தலையில் பொருத்தப்பட்ட குவாண்டம் கணனியின் செயலியின் இயற்பியல் அடிப்படையை ஒத்ததாக இந்த பீனியல் சுரப்பியின் மூளை மணற்றுகள்கள் உள்ளன என அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

அந்தவகையில் பீனியல் சுரப்பியே உடல் மற்றும் உடல்சாரா (ஆன்மிக) உலகங்களுக்கிடையிலான தொடர்பாடற்கருவி எனவும் நம்பப்படுகிறது. இதன் உதவியுடனே மீயுணர் திறன்கள் (Extra Sensory Skills) உருவாகின்றன என்கிற கருத்தும் உண்டு.

17ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற பிரான்ஸ் நாட்டு மெய்யியலாளரும் விஞ்ஞானியுமாகிய Rene Descartes பீனியல் சுரப்பியை ஆன்மாவின் பிரதான இருக்கை (Principal Seat of the Soul) எனக் குறிப்பிட்டுள்ள மையும் இங்கே நோக்கற்பாலது. (Lokhorst,.G.J: 2018)

இதனையே மனிதனின் "மூன்றாவது கண்" என்று கருதிய மரபு சித்தர்மரபில் மட்டுமன்றி சீன-திபேத்திய, யூத மரபுகளிடத்திலும் உண்டு. சித்தர்கள் தமது பரிபாஷையில் "ஞானமணி" என்றும் விளக்கு, திரியற்ற சுடர், அந்தரத்துச் சுடர், விட்டத்து விளக்கு எனப் பலவாறு சுட்டியுள்ளனர். பீனியல் சுரப்பியின் இருப்பிடத்தை வர்ணிக்கும் போது

*"ஊறும் அருவி உயர்வரை உச்சிமேல்*
*ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு"*

(திருமந்திரம், பா.2335)

*"மேலப்பிறைதனில் நெற்றி நேர்நின்ற*
*கோளத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே"*

(திருமந்திரம், பா.)

ஆகிய திருமந்திர அடிகள் மதியமுது சுரக்கும் இடமாகிய பீனியல் சுரப்பியை "உச்சிமேல் ஆறின்றிப் பாயும் அருங்குளம்" என்றும் "நெற்றி நேர்நின்ற கோளம்" என்றும் அடையாளப்படுத்தியுள்ளமை நோக்கற் பாலது.

இதேபோன்று ஞானமணியாகிய பீனியல் சுரப்பியின் அமைவிடத்தினை அழுகண்ணிச்சித்தர் பின்வரும் பாடலில் அடையாளப்படுத்த முனைந்திருப்பதனையும் காணலாம்.

*"கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்*
*உண்ணாக்கு மேலேறி உன்புதுமை மெத்த உண்டு"*

(அழுகண்ணிச்சித்தர் ஞானம், பா.20)

மேலும் பத்திரகிரியாரின் பாடலிலும் பீனியல் சரப்பியின் இருப்பிடம் பற்றி அடையாளங்காண முடிகிறது.

*"நாட்டுக்கால் இரண்டும் விட்டு நடுவுக்கால் ஊடே போய்*
*ஆட்டுக்கால் இரண்டினுள்ளே அமர்ந்திருப்பது எக்காலம்"*
(பத்திரகிரியார், பா.142)

இங்கே செரிபிரல் ஹெமிஸ்பியர் அமைப்பையே ஆட்டுக்கால் இரண்டு, கடா அடிச்சுவடு என்ற பரிபாஷைகள் சுட்டுவதாகக் கருத இடமுண்டு.

*"கடாவடிச் சுவடில் காலுமொளி கசியும்தன்*
*தடாகநிலை யுணர்ந்து"* (அகத்தியர் பரிபூரணம், பா.33)

பீனியல் சுரப்பி ஒளிர்கின்ற சிறிய LED குமிழ்போன்று இருக்கும். அது இருட்டில் மெலடோனின் என்கிற ஹோமோனைச் சுரக்கும். "காலும் ஒளி கசியும்" என்ற தொடர் அதன் ஒளிர்கின்ற இயல்பை மிக அநாயாசமாகக் குறிப்பால் உணர்த்தியுள்ளது.

"தடாக நிலை" என்பது சித்த விருத்தியைக் கட்டுப்படுத்திய நிலை. இதனை சித்ததடாக நிலை (சித்தத்தின் பிரவாகத்தை அணைபோட்டுத் தேக்கிய நிலை) என்பர். இந்த சித்தத் தடாக நிலை தனியாக ஆராயப்பட வேண்டிய பகுதி. இதனையே "Operational Rest" என்று இன்றைய அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. "சும்மாயிருத்தல்", "தூங்காமல் தூங்கி சுகம்பெறு", "சோம்பியிருத்தல்" எனச் சித்தர்கள் இதனைக் கூறிச் சென்றுள்ளனர்.

**மெலடோனின் – மதியமுதம்**

பீனியல் சுரப்பியால் இரவு நேரத்தில் சுரக்கப்படுவது மெலடோனின் ஹோமோன் ஆகும். இது Bio Clock or Circadian rhythm (சர்க்காடியன் ஒழுங்கு) எனப்படும். உடலின் தூக்க விழிப்பு நேரத்தை ஒழுங்குபடுத்துகிறது. இதிலுள்ள அன்ரி ஒக்ஸிடன்கள் புற்றுநோய் எதிர்ப்பு, கீல்வாதம், நரம்பியல் நோய்கள் மற்றும் வயோதிபத்துக்கு எதிராகச் செயற்படவல்லன. (Macchi,M, Bruce, J.N:2004: 177–180)

வளர்சிதை மாற்றங்களுடன் தொடர்புடைய பிற ஹோமோன்களை ஒழுங்கமைக்க மெலடோனின் உதவும். நிறைவான மெலடோன் சுரப்பினால் குதூகலம், நிறைவு, புளகாங்கித உணர்ச்சி கிட்டும்.

அதிகாலை சூரியஒளியானது பார்வை நரம்பூடாக உணரப்பட்டு இரவில் பீனியல் சுரப்பியின் மூலம் மெலடோனின் சுரப்பதற்கு ஏதுவாகிறது. இதனாலேயே "மதியமுதம்" என (சந்திரன் சூரிய ஒளியை வாங்கி இரவில் தண்ணொளியைத் தருதல் போல) சித்தர்கள் மெலடோனின் சுரப்பதனைச் சுட்டினர்.

*"கெதிபெற வேணுமென்றால் ஆத்தாளே*
*கேளாமலே கேட்டு*
*மதியமுதம் கொண்டபின்பு ஆத்தாளே*
*மறுகற்பம் கொண்டிடுவாய்"* (அழுகண்ணிச்சித்தர், பா.86)

*"உயிர்நிலைக்க மதியமிர்தம் உண்ண வேண்டும்*
*தேங்குவது மெய்ஞ்ஞான போதத்துள்ளே"*

*"ஜெனனமில்லை மரணமில்லை தெளிந்து பாரு*
*பாங்குவது மதியமுதம் உண்ணுமென்று"*
(போகர் ஞான சாராம்சம்)

*"அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்*
*குமுத சகாயன் குணத்தையும் கூறி"* (விநாயகரகவல், 45-46)

(குமுதசகாயன் - ஆம்பலின் தோழனாகிய சந்திரன் ஆதித்தனின் இயக்கத்துக்கும் குமுதசகாயனாகிய சந்திரனின் அமுத நிலைக்கும் இடையிலுள்ள பண்பிணைப்பைக் கூறி)

*"மதியமுது சொரியும் மனோலய சுகந்தேடி"*
(உரோமரிஷி இரண்டடி 500)

*"எண்ணரிய பிறவிதனில் மானுடப்பிறவிதான்*
.....................................
*பவுரி குலையாமலே கௌரிகுண்டலியாயி*
*பண்ணவிதன் அருளினாலே*
*விண்ணிலவு மதியமுதம் ஒழியாது மொழியவே*
*வேண்டுவே னுமதடிமை நான்"*
(தாயுமானவர் சுவாமிகள், வித்தகச் சித்தர் கணம், பா.4)

உண்ணாக்கின் மேலாக உள்ள அரும்பு போன்ற அமைப்புடைய சுரப்பியினை யோகசாதனையினால் தூண்டும்போது அது சிந்துகின்ற உணர்வானது ஊனுடம்பை கருப்பஞ்சாற்றைப் போல் உருக்கித் திளைக்க வைக்கும் தன்மையது எனத் திருமூலர் சுட்டுவது இவற்றுடன் இணைத்து நோக்கற்பாலது.

*"நீங்கரும்பாகவே செந்தொழிலுள்ளவர்*
*ஆங்கரும்பாக அடைய நாவேறிட்டுக்*
*கோங்கரும்பாகிய கோனை நிமிர்த்திட*
*ஊன் கரும்பாகியே ஊணர் வருமே"* (திருமந்திரம், பா.788)

முற்காலத்தில் முனிவர்களும் சித்தர்களும் அதிகாலை வேளையில் சூரியநமஸ்காரம் செய்வதும் பின்னர் கண்களை மூடி இருண்ட குகைகளில் தியானத்தில் அமர்வதும் அறிவியல் நோக்குநிலையில் பீனியல் சுரப்பியின் உத்வேகத்தைத் தூண்டி மதியமுதம் பருகுவதற்கோ என எண்ணத் தூண்டுகிறது.

**தைமஸ் சுரப்பி (பிள்ளைச்சிட்டான்)**

சித்தர் பரிபாஷையில் பிள்ளைச்சிட்டான் எனச்சுட்டப்பட்ட தைமஸ் சுரப்பி மார்புக்கூட்டில் இதயத்துக்குச் சற்றுமேல் அமைந்துள்ளது. இதை Hassel's corpuscles சுரக்கின்றது. சுரப்புப் பொருள் தையமின் ஆகும்.

பன்னிரண்டு வயதில் தனது முழுமையான வீரியத்தோடு செயற்படும் தைமஸ் படிப்படியாகத் தனது செயற்பாட்டை நிறுத்திக் கொள்கிறது. நோயெதிர்ப்பு ஆற்றல், பிள்ளைப்பருவத்தினர்க்கே சிறப்பாக வாய்க்கப்பெற்ற குதூகல உணர்வு, புத்துணர்ச்சி, பாலுணர்ச்சி என்பன தைமஸ் சுரப்பால் வாய்க்கப்பெறும். (Chatterjee,C.C.,2018 :666)

பிள்ளைப் பருவத்தினர்க்கே உரித்தான உணர்வு உந்தல்களுக்குக் காரணமாக அமையும் இதனை "பிள்ளைச் சிட்டான்" என்று சித்தர்கள் பரிபாஷித்திருப்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். (சம்பங்கி ஞானசோதி:2002:125)

*“பிள்ளைச்சிட்டான் பிடிச்சுக் கொடுத்தான்டி*
*தொல்லை அத்தனையும் தொலைச்சு வைச்சான்டி”*

(ஞானக்குறத்திக்கூத்து)

சித்தர் கருத்தியலின்படி ஆன்மிக சாதனையினால் (யோக சாதனை யாகவும் அமையலாம்) வயோதிபரிடத்திலும் தைமஸ் சுரப்பியினை மீளச் செயற்படுத்த வைக்க இயலும்.
இதனையே,

*“உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்*
*முலைமேல் அமிர்தம் பொழிய வைத்தானே”*

(திருமந்திரம், பா.2842)

எனத் திருமூலர் குறிப்பிடுவார்.

தைமஸ் சுரப்பி மீள அதன் முழு வாண்மையுடன் செயற்படுத்த வைக்கப்படுகையில் குருதியானது செம்புரவிகள் தமது இலக்குகளை நோக்கிச் சீறிப்பாய்வது போன்று உடலில் உற்சாகப்பெருக்கெடுக்கும். இதனால் பதின்மவயதுக்காரர் போல விருத்தாப்பியன் மடைமாற்றம் பெறுவான். இதனை

*“இதயக் குவிமுகையில் இருந்தகனி தேன் சொரிய*
*பதின்மத்துறை தேடிப் பாய்கிறதே செம்புரவி”*

(காகபுசுண்டர் ஞானம், பா.30)

எனச் சித்தர் பாடல் குறிப்பிடும்.

யோக சாதனையின் மூலமாகக் குண்டலினி ஆற்றலை மேல் எழுப்புவதனூடாக தைமஸ் சுரப்பியையும் பீனியல் சுரப்பியினையும் உத்வேகமாகத் தொழிற்படச் செய்ய முடியும் என்பதனையும் சித்தர் பனுவல்கள் பரிபாஷைகளூடாக அடையாளப்படுத்தியுள்ளன.

*“மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்*
*குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ*
*உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்*
*முலைமேல் அமிர்தம் பொழிய வைத்தானே”*

(திருமந்திரம், பா.2882)

யோக சாதனையின் மூலமாகக் குண்டலினி ஆற்றலானது சகஸ்ரதளமாகிய மூளையில் சென்று ஒளிவீசும் பீனியல் சுரப்பியைத் தூண்டுவதை "மான்கன்று துள்ள" என்ற பரிபாஷையாலும் பிட்யூட்டரின் சுரப்பியைத் தூண்டப்படுவதனை "குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ" என்ற பரிபாஷையாலும் கொல்லனின் உலைக்களத்தில் இருந்த இரும்பு செம்பிழம்பாக உருகியது போல நெஞ்சுக்கூட்டில் அமைந்த தைமஸ் சுரப்பி தூண்டப்பட்டுத் தனது ஜீவரசத்தினைச் சிந்துவதனை "முலைமேல் அமிர்தம் பொழிய வைத்தானே" என்ற பரிபாஷையாலும் திருமூலர் சுட்டியுள்ளார்.

"உயிரை இயக்கும் பீனியல், பியூட்டரின், ஹைபோதாலமஸ், தாலமஸ், செரிபிரம் ஆகிய பகுதிகள் கிளர்ச்சி அடைந்து அமிர்த கலைகளாக மாறித் தேகத்தை மடைமாற்றம் செய்கின்றன. இந்த அனுபவம் முதிரமுதிர உடலில் நிறமாற்றம், ஞானஒளி, சாந்தம், பிறரை ஊடுருவிப் பார்க்கும் திறன் ஏற்படுகிறது" என்ற பேராசிரியர் சு.ப.மணியன் அவர்களின் கருத்தும் இவ்விடத்தில் நினைவு கூரற்பாலது. (மணியன், ப.சு.:2004:75)

## "உண்டது நஞ்சு" என்று உரைப்பர்

"மதியமுதம்" எனப்படும் அமிர்தநிலைஉணர்வு சித்திப்பதற்கு விந்து ஜெயம் அவசியம் எனச் சித்தர்கள் வலியுறுத்துவர். காம ஆற்றலாக வீணாகும் சுக்கிலத்தை ஆன்மிக ஆற்றலாகச் சுழுமுனை ஊடாக மேலேற்றிப் புருவ நடுவில் ஒளியாக மடைமாற்றுதலே விந்து ஜெயம் என வழங்கப்படுகிறது. (மலர்,அ.,2002:110)

*"வெள்ளி உருகிப் பொன்வழியே ஓடாமே*
*கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார்"*

(திருமந்திரம், பா.814)

இப்பாடலில் இடம்பெறும் "வெள்ளி" என்பதும் "பொன்" என்பதும் முறையே ஆணின் சுக்கிலத்தையும் பெண்ணின் சுரோணிதத்தையும் குறிக்கப் பயன்பட்ட பரிபாஷைகளாகும்.

பிரணவ மந்திரத்தைத் தியானித்து மேதை முதலான சந்திர கலைகளைத் தொடர் பயிற்சியால் உணர்வுடன் இணைத்துக் கொண்டு ஆதாரங்களில் அனுபவம் பெற்றுத் தத்துவங்களை அறியும்போது சுக்கிலம் கனலாக மாறி மேலெழும் என்பார் திருமூலர்.

> *"மேதாதியாலே விடாது ஓம் எனத் தூண்டி*
> *ஆதார சோதனை அத்துவ சோதனை*
> *தாது ஆரமாகவே தான் எழச் சாதித்தால்*
> *ஆதாரம் செய்போகம் ஆவது காயமே"*
>
> (திருமந்திரம், பா:1691)

இவ்விந்து ஜெயத்தையே சிவன் நஞ்சுண்ட செயலாக பரிபாஷிக்கிறார் திருமூலர்.

> *"கண்டம் கறுத்த கருத்து அறிவார் இல்லை*
> *உண்டது நஞ்சு என்று உரைப்போர் உணர்வு இலோர்"*
>
> (திருமந்திரம், பா.187)

இதற்கு "விந்து சக்தியை கீழ்முகமாகச் செலுத்தி இருளில் ஆழ்ந்து விடாமல் அதனை மேல்முகமாக ஏற்றி ஒளிமயமாகச் செய்வதே நஞ்சு உண்டது ஆகும். அதனால் கழுத்து கறுத்தது நெற்றி சுடர் மிகுந்தது விந்துவினை மேல்முகமாக ஏற்றுவது அதோமுகம்" என்று உரை எழுதிச் செல்வார் சு.ப.அண்ணாமலை

> *"சிவபெருமான் ஊர்த்துவரேதஸ் உடையவர். விந்து*
> *மேலேறு வதே ஊர்த்துவரேதஸாம்.*
> *காமத்தால் விந்து கீழிறங்கும். ஞானத்தால் மேலேறும்"*
>
> (திருவருட்பா உரை, 419)

என ஊரன் அடிகளும் குறிப்பிடுவார்.

பரியங்க யோகத்தால் விந்து ஜெயமாக மடைமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதனை திருமூலர் பின்வரும் பாடலிற் சுட்டுவார்.

> *"நாட்டனஞ் செஞ்து குளிக்கின்ற கூவலுள்*
> *வட்டனப் பூமி மருவிவந் தூறிடுங்*

*கட்டனஞ் செய்து கயிற்றால் தொழுமியுள்*
*ஒட்டனஞ் செய்தொளி யாவர்க்குமாமே"*

(திருமந்திரம், பா.2906)

- கொட்டு - கிணறு
- கொட்டனஞ் செய்து குளித்தல் - பரியங்க யோகம் பயிலுதல்
- வட்டனப் பூமி - ஆகாயம், சகஸ்ர தளம்
- தொழுமுதல் - நிலைப்படுத்தல்
- ஒளி - அமுதம் அல்லது குண்டலினி ஆற்றல்
- கூவல் - யோனி, பிரமரந்திரக்குழி
- கட்டனஞ் செய்தல் - மடைமாற்றம் செய்தல் (கட்டுதல்)
- ஒட்டனம் செய்தல் - ஒட்டிக்கொள்ளுதல், உடல் முழுவதும் பரவுதல்

G.வரதராஜன் இத்திருமந்திரத்திற்குப் பின்வருமாறு பொருள் கொள்கிறார். பரியங்க யோகம் செய்து திளைக்கின்ற யோனியாகிய குளத்தில் இன்பமாகிய ஊற்றுப் பெருகும். இந்த வீரியமான ஆற்றலை வெளியே விடாமல் நடுநாடி ஆகிய கயிற்றால் கட்டி உடலினுள்ளே (மடைமாற்றி) நிலைபெறுமாறு செய்தால் ஒளியுணர்வு தோன்றும். பரியங்க யோக சாதனையால் விந்து ஜெயம் பெற்று ஒளிபெறலாம். (வரதராஜன்,G:2002:600-601)

விந்து சுழுமுனையாக மேலேறி நெற்றியிலே ஸ்திரப்பட்டு ஒளியாகச் சுடர் விடுமா என்பது இன்னும் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படவில்லை. ஆனால் மூன்றாங்கண் எனப்படும் ஞானமணி ஆகிய பீனியல் சுரப்பியின் தொழிற்பாட்டுக்கும் விந்து வெளியேற்றத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பீனியல் சுரப்பியினால் சுரக்கப்படும் மெலடோனின் அளவு (சித்தர் பரிபாஷையில் மதி அமுது) விந்து வெளியேற்றத்தினால் குறைவடையும் என்பதும் வெளியேறாத நிலையில் செறிவாகச் சுரக்கும் என்பதும் அறிவியலால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பீனியல் சுரப்பிற்கும் விந்துச் சுரப்பிற்கும் எதிர் விகிதச் செயல் (Reciprocal function) உள்ளது என்பதனை இன்றைய உடற்கூற்று அறிவியலும் ஏற்றுக்கொள்கிறது.

1. Pineal body is performed by controlling the release of G.R.F
2. Pineal body activity is increased while gonodael development is inhibited
3. Enlargement of reproductive Organs and early onset of puberty due to Pineal ectomy in rats
4. Delayed puberty and reduced ovarian weight followed by injection of Pineal extracts
5. Histochemically, Pineal phospolipid is highest during de oestrus and lower during oestrus
6. During oestrus cycles, serotonin content and HIMOT activity of Pineal is reduced (Chatterjee, C.C.2018:670)

**வெட்டவெளி**

சித்தர் பனுவல்களில் வெட்டவெளி, தனிவெளி, மேல்வீடு, உச்சவெளி, உயர்வெளி, சிதாகாசம், உச்சித்தாமரைச் சூனியம், சொல்லிறந்த தூவெளி, பாழ், அத்தாணி மண்டபம், நிரலம்பபுரி, நிர்வாணச்சக்கரம், நிலா மண்டபம் முதலிய பரிபாஷைகள் ஆக்ஞா சக்கரத்துக்கு மேலுள்ள சகஸ்ரதளத்தைச் சுட்டுவனவாகும். இதனைப் பொதுநிலையில் மூளை அமைந்திருக்கும் கபாலப் பகுதி எனக்கருதுவர்.

“வெளி என்பது மூளையைச் சுட்டும்” எனப் பொதுப்படையாகப் பேராசிரியர் சக்தி சுப்பிரமணியம் அவர்கள் தனது சித்தர் மறைபொருள் அகராதியில் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கற்பாலது.

(சுப்பிரமணியம்,சக்தி,பி:2000:30)

எவ்வாறாயினும் உடற்கூற்றியல் வல்லுனர்கள் மனித மூளையின் (பெருமூளையின்) இரண்டு ஹெமிஸ்பியர்களுக்கு (Hemisphers) இடையே Hollow Space (வெற்றறை) ஆக அமைந்துள்ள மூளை தண்டு

வட அச்சின் (Cerebro spinal Axis) உட்புறத்தினையே இது பரிபாஷையாகச் சுட்டியுள்ளது என்பர். (Harish, Johari: 1987:21)

மனித மூளையின் மூன்றில் இரண்டு பகுதியளவானதான பெருமூளை (Cerebrum) நீள் வட்டத்தில் வலது மற்றும் இடது என இரு பிரிவுகளாக ஒரு ஆழமான பிழவு மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆழமான பிழவு செரிப்ரல் ஹெமிஸ்பியர் (Cerebral Hemispheres) எனப்படுகிறது.

இந்தச் செரிப்ரல் ஹெமிஸ்பியரின் இடையே வெற்றறையாக (Hollow Space) மூளை தண்டுவட அச்சின் (Cerebral – Spinal Axis) உட்புறத்தே அமைந்த பகுதியைக் குறிப்பர். இது ஆட்டின் இரண்டு கால்களின் அடிப் பகுதியைப் (குழம்புகள்) போலத் தோற்றமளிக்கும். செரிப்ரல் ஹெமிஸ் பியர்களின் இடையே உள்ள வெற்றறையைச் சுட்டும் வகையிலேயே

*"ஆட்டுக்கால் இரண்டினுள்ளே அமர்ந்திருப்பதெக்காலம்"*
(பத்திரகிரியார், பா.142)

என்ற பத்திரகிரியார் பாடல் அடிகளை நோக்க வேண்டி உள்ளது. இதனை உறுதிசெய்யும் வகையில்,

*"ஆட்டின் காலடியில்*
*அத்தாணி மண்டபத்தில்*
*வீட்டின்பச் சுவை மாந்தி.....*" (வான்மீகிநாதர், பா.25)

என்ற சித்தர் பாடலையும் குறிப்பிட இயலும்.

தன்னுணர்வு களையப்பட்ட மெய்யுணர்வின் நீட்சியை "வெட்டவெளி" என்றும் "சிதாகாசம்" என்றும் "சீவப்பாழ்" என்றும் சித்தர் பனுவல்கள் சுட்டின.

*"சொல்லிறந்த தூவெளி"*
*"ஓடம் உடைந்து போன*
*ஒப்பிலாத வெளியிலே*" (சிவவாக்கியர், பா.23)

*"விருப்பு வெறுப்பில்லாத*
*வெட்ட வெளி அதனில்*
*இருப்பே சுகம்*" (பட்டினத்தார், நெஞ்சொடு மகிழ்தல், பா.13)

*"எல்லாம் உனக்குள்ளே*
*ஏகமாய்த் தேர்ந்து*
*வெட்ட வெளியினைச் சார்ந்த"*

(கடுவெளிச்சித்தர், ஆனந்தக்களிப்பு, பா.23)

இக்கட்டுரையில் முன்பே குறிப்பிட்டிருந்தவாறு குண்டலினி யோகத்தின் சாதனையால் சகஸ்ர தளத்தினில் கலந்திருக்கும் போது ஞானமணி, சிகாமணி முதலிய சுரப்பிகளின் நிறைவான செயற்பாடுகள் "Operational rest" எனப்படும் அமைதி நிலையைத் தரும். இதனைச் சித்தர்கள் "சோம்பியிருக்கும் நிலை" என்பர். (சோமு,மீ.ப:2004:81)

சிவவாக்கியர் இதனையே "அது நோக்கற்ற நோக்கு" என்றார். (சிவ வாக்கியர்,பா.288)

பத்திரகிரியார் "இமையாமல் நோக்கும் நோக்கு" என்றார். (பத்திரகிரியார், பா.74)

திருமூலர் "தூங்கிக் கண்டார் நிலை"எனச் சுட்டினார். (திருமந்திரம்.129)

"விழித்துக்கொண்டே உறங்குதல்" என ரமணமகரிஷி விளம்பியதும் இதைத்தான் குறித்துநின்றது.

இந்நிலையிலிருந்து கொண்டே பிரபஞ்சத்தின் பேராற்றலுடனான இணைப்பை ஆன்மா பெற முயல்கிறது. இதுவே காத்திருப்புப் பிரதேசம் ஆகிய மீவியல் வெளி ஆகும். மீவியல் வெளி (Liminal) என்ற கருத்தியலுக்கு ஏகாந்தம், அந்தகாரம், வெறுமை முக்கியமானதொரு முடிவை எதிர்பார்த்திருக்கும் தருணம் என்றெல்லாம் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

("Liminal", Oxford English Dictionary. Ed. J. A. Simpson and E. S. C. Weiner. 2nd ed. Oxford: Clarendon Press, 1989. OED Online Oxford 23, 2007)

காத்திருப்புப் பிரதேசத்திலிருந்து பரவெளிக்கான இணைப்பைப் பெறுவதற்கான அனுசரணைகளை முழுமையாகத் தூண்டப்பட்ட ஞானமணி, சிகாமணி முதலிய சுரப்பிகள் வழங்குகின்றன.

*"ஆக வெளிக்குள்ளே அடங்காப் புரவி செல்ல*
*ஏக வெளியில் இருப்பது இனி எக்காலம்"*

(பத்திரகிரியார், மெய்ஞ்ஞானப் புலம்பல், பா.96)

*"மெய்ஞ்ஞானப் பாதையிலேறு - சுத்த*
*வெட்ட வெளியினைத் தேறு"*

(கடுவெளிச்சித்தர், ஆனந்தக்களிப்பு, பா.11)

*"நயனத்திடை வெளிபோல் நண்ணும் பரவெளியில்*
*சயனித் திருந்து தலைப்படுவது எக்காலம்"*

(பத்திரகிரியார், மெய்ஞ்ஞானப் புலம்பல், பா.195)

முதலிய பாடலடிகள் இத்தகைய கருத்தோட்டத்தை அரண்செய்வதாக உள்ளன.

**பிரம்மரந்திரம்**

ரந்திரம் என்றால் துவாரம் என்று பொருள்படும். பிரம்மரந்திரம் என்பது பிரம்மாவின் துவாரம் என்று பொருள்படும். பிறந்த குழந்தையின் (மழலைப் பருவத்தில்) தலையில் உள்ள உச்சிப்பாகத்தினை இப் பெயரால் சுட்டுவர். இதனை Anterior Fontanelle என உடற்கூற்றியல் அறிஞர்கள் சுட்டுவர். குழந்தைகள் வளரும்போது எலும்புகள் வளர்வதால் இத்துவாரமும் மறைந்து விடுகிறது. (வழித்துணை ராமன், ஏ.எஸ்., 2010:114)

கபால மோட்சமடைதல் பற்றிய விபரிப்புக்களில் அவர்களின் சீவன் "மேலை வாசல்" எனப்படும் இந்தப் பிரம்மரந்திரத்தின் ஊடாக வெளியேறும் எனக் கருதப்படுகிறது. கட உபநிடதம் போன்றவற்றில் இதன் ஆதிக் கருத்தமைவுகளை அடையாளங்காண முடிகிறது. சித்தர் இலக்கியங்களில் இது பற்றிய அனேக சான்றுகள் உள.

*"மேலை வாசல் வெளியுறக் கண்டபின்*
*காலன் வார்த்தை கனவிலும் இல்லையே"*
(திருமந்திரம், பா.602)

*"மேலை யண்ணாவில் விரைந்திரு காலிடர்*
*காலனும் இல்லை கதவு திறந்திடும்"* (திருமந்திரம், பா.785)

**பரியங்க யோகம் என்ற பரிபாஷை**

சித்தர்கள் "பரியங்க யோகம்" என்ற பரிபாஷையூடாகக் கணவனும் மனைவியும் மேற்கொள்ளும் தாம்பத்திய உறவின் தாற்பரியங்களைப் பேசியிருக்கிறார்கள். "பரியங்கம்" என்றால் பஞ்சணை அல்லது கட்டில் எனப்படும். முறையான தாம்பத்திய உறவு என்பதும் மிகவும் கவனக்கு விப்புடைய ஒருவகை யோகநிலையேயாகும். அட்டாங்க யோகத்தின் படி நிலைகளைப்போல இதிலும் விலக்கப்பட வேண்டியவை, பின் பற்றப்பட வேண்டியவை, காலப்பிரமாணம் நிலை, மூச்சுப்பயிற்சி முதலிய விடயங்கள் உண்டு.

*"பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை"* (திருமந்திரம், பா.811)
*"காதற்றுணையோடு கண்ட பரியங்க யோகத் திளைப்பில்"*
(தேரையர், 76)

இங்கே கடிகை என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் நேரத்தைச்சுட்டும் நியம அலகாகிய நாழிகையைக் குறித்து நின்றது. ஒரு "நாழிகை" என்பது இருபத்துநான்கு நிமிடங்களுக்குச் சமமானது. அந்தவகையில் "பஞ்ச கடிகை" என்றால் 24x5=120 நாழிகைகள் - அதாவது இரண்டு மணித்தியாலங்கள் ஆகும்.

கட்டில் மேல் காதல்மொழிபேசி ஆரம்பமாகும் தாம்பத்திய உறவானது அதன் பரிபூரணத் தன்மையை அடையும் காலஅளவை நூற்றிருபது நாழிகையாகச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

*"அஞ்சு கடிகைமேல் ஆறாங் கடிகையில்*
*துஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன் பால்*
*நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது*
*பஞ்ச கடிகைப் பரியங்க யோகம்"* (திருமந்திரம், பா.810)

இன்றைய தம்பதிகளுக்கு இது ஆச்சரியமானதாகத் தோன்றினாலும் முழுமையான தாம்பத்திய உறவை யோகமாகச் சித்தர்கள் கூறி இருப்பதன் தாற்பரியத்தை நோக்கினால் இதன் உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

*"மோகத்தில் வெள்ளியும் மீளும் வியாழத்தில்*
*சூதொத்து மென்மலை யாளும் நற்சூதனும்*
*தாதிற் குழைந்து தலைக்கண்ட வாறே"*

(திருமந்திரம், பா.806)

இப்பாடலில் இடம்பெறும் "வெள்ளி" என்பதும் "வியாழன்" என்பதும் முறையே ஆணின் சுக்கிலத்தையும் பெண்ணின் சுரோணிதத்தையும் குறிக்கப்பயன்பட்டது. சம்போக அனுபவம் பற்றிய பரிபாஷையாகவே இது உள்ளது.

## குழந்தையின் பால்நிலை குறித்த பரிபாஷை

இன்றைய மருத்துவ அறிவியலின் பிரகாரம் பிறக்கப்போகும் குழந்தை ஆணா? பெண்ணா? எனத் தீர்மானிப்பவை பெற்றோரிடமிருந்து தரப்பட்ட பால்நிர்ணய குரோமசோம்களே ஆகும். ஒரு மனிதனிடத்திலுள்ள இருபத்துமூன்று சோடி குரோம்சோம்களில் இறுதி ஒருசோடி மட்டுமே பால்நிர்ணய குரோம்சோம்களாகும்.


பெண்களிடம் எப்போதும் இவை (X,X) ஆகக் காணப்படும். ஆண்களிடம் இவை (X,Y) ஆக அமைந்திருக்கும். பெண்ணின் கருமுட்டையுடன் இணையும் உயிரணுவில் "Y" குரோம்சோம் வாய்க்கப்பெறின் பெண்ணிடம் எப்போதுமே உள்ள "X" உடன் உயிரணுவிலுள்ள "Y" இணைந்து "XY" ஆகும். இதுவே ஆண் குழந்தையைத் தீர்மானிக்கும் குரோம்சோம் இணைப்பாகும்.

அவ்வாறு நடைபெறாமல் ஆணின் உயிரணுவிலுள்ள "X" உள்நுழையின் பெண்ணின் கருமுட்டையிலுள்ள "X" உடன் இணைந்து "XX" ஆகும். இது பெண்குழந்தையைத் தீர்மானிக்கும் குரோம்சோம் இணைப்பாகும்.

இத்தகைய கருத்துருவாக்கத்தைப் பூடகமாகப் பிரதிபலிக்கும் பரிபாஷை யொன்று திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளது. திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தில் கர்ப்பக்கிரியை என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள பாடலில் இது பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்"- (திருமந்திரம், பா.478) இங்கே ஆண்மிகுதல் என்பதனை "Y" உள்நுழைதல் என்றும் பெண்மிகுதல் என்பதனை "X" உள்நுழைதல் என்றும் கருத்து விளக்கம் செய்ய இயலும்.

(ரிஷபானந்தர்:2014:159)




## முத்தோட பரிபாஷை

வாதம், பித்தம், கபம் (சிலேட்டுமம்) ஆகிய மூன்று நாடிகளின் செயற்பாடுகளின் சீர்மையும் சீரின்மையும் சித்தர்களால் துல்லியமாகக் கவனிக்கப்பட்டது. முறையே 1:1/2:1/4 அல்லது 4:2:1 என்ற விகிதங்களில் தொழிற்படும் போது ஆரோக்கிய நிலையும் இது அல்லாத சந்தர்ப் பங்களில் இதுவே தோடம் அதாவது குற்றமாகி நோய் நிலைக்கும் வழி வகுக்கும்.

உணவு, காலநிலை மற்றும் இதர பழக்கவழக்கங்களால் இவை தமது நியம விகிதாசாரங்கள் குலைந்தே உடலில் பொதுவாகக் காணப் படுவதனால் இவை முத்தோடங்கள் அதாவது முக்குற்றங்கள் (சுவஸ்த அவஸ்தை) எனப்படுகின்றன.

வாதம் என்பது சலனம் / கதி, உணர்வு / அசைவு என்று பொருள்படும். வாதத்தை "வளி" எனத் தமிழில் மொழிபெயர்ப்பினும் அது "காற்றை"

குறிப்பதாக நேரடியாகப் பொருள் கொள்வது பொருத்தமற்றது. இது சூக்குமமானது. (நரம்பியலின் தொழிற்பாட்டுக்கு ஆதாரமானது)

பித்தம் உடலில் நடைபெறும் இரசாயன மாற்றங்களுக்கு அடிப்படையானது. உடலானது உணவை உடற்றொழிற்பாடுகளுக்காகத் தன்மயமாக்குவதற்குப் பித்தம் இன்றியமையாதது. இதனாலேயே பித்தம் அழல் அல்லது அக்கினி (வன்னி) எனப்பட்டது. இது வாதத்தைப் போல் சூக்குமமானதோ அன்றி கபம் போல ஸ்தூலமானதாயோ அன்றி இடை நிலையுடையது. உஷ்ணம், எண்ணெய்த்தன்மை வியாபிக்கும் தன்மை, புலால் நாற்றம் என்பன பித்தத்தின் பண்புகளாகும்.

(திலகேஸ்வரி,கு.,2011:24)

கபநாடியானது ஏனைய இரு உயிர்த்தாதுக்களைப் போலன்றி ஸ்திர ரூபமானது. குளிர்ச்சி, மிருது, ஸ்திரம், மந்தம், வழுவழுப்புத்தன்மை என்பன கபத்தின் இயல்புகள் ஆகும்.

இந்நாடிகளின் நடையினை (துடிப்பினை) மருத்துவன் துணிபதற்கேற்ற குறிப்புக்கள் பரிபாஷைகளாகச் சித்தர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு மனிதன் நோய் அற்ற போது ஒருவகை நடையும் நோய் உற்றபோது ஒருவகை நடையும் இந்நாடிகளில் வெளிப்படும். நோயின் வேறுபாட்டிற்கேற்ப இவற்றின் நடைவேறுபாடும் மாறுபடும். மருத்துவன் இந் நாடிகளின் நடையைத் துணிபதன் மூலமே நோயை நிதானிக்க இயலும்.

சித்தர்கள் இவற்றை விலங்குகள், பறவைகள், ஊர்வன முதலியவற்றின் நடைகளைப் பரிபாஷையாக்கி விளக்கியுள்ளனர். பித்தநோய்க்குறி ஏற்பட்டால் அன்னநடை, மயில்நடை, தாராநடை, சிங்கநடை, மதயானை நடை, சிறுபிள்ளை குதிப்பது போன்ற நடை என இது மாறுபடும்.

(தன்வந்திரி நாடி சாஸ்திரம், செய்யுள் 10,13)

சுகதேகியின் தேகத்தில் கபநாடியின் நடை தவளை மற்றும் பாம்பின் அசைவுகளை ஒத்திருக்கும்.

*“போகிய தவளை பாம்பு பொல்லாத சிலேட்டுமந்தானே”*

(அகத்தியர் ரத்தினச் சுருக்கம், செய்யுள். 3)

நோய் நிலைகளில் இது கோழியின் நடை, கொக்கினது உறக்கம், சிலந்தி வலையினில் பூச்சியின் அசைவு ஆகியவை போல அமையும். (வான்மீகி நாடி சூத்திரம், செய்யுள். 24)

இங்கே சொல்லப்பட்ட பிராணிகளின் உவமைகள் யாவும் மருத்துவருக்கு மட்டுமே புரிகின்ற பரிபாஷைகளாகும். இவை பட்டறிவின் மூலமும் குருவினிடமிருந்தும் கற்றுக்கொள்ளப்பட வேண்டியவை. ஒருவகையில் இவை மருத்துவக் கலைச்சொற்களே ஆகும்.

(தயாளினி,தி.,வித்தியா,மி.பி,:2020:30)

அந்தவகையில் ஆரோக்கியமான தேகத்தில் வாதநாடியானது அன்னம், கோழி, மயில், ஓணான் போல நடக்கும்.

*"அன்னமே கோழி ஓணான் மயிலென நடக்கும் வாதம்"*

(யூகிமுனி)

*"வாகினில் அன்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்"*

(அகத்தியர் இரத்தினச் சுருக்கம், செய்யுள்.3)

இதுவே நோயுற்ற நிலையில் மண்டுகம் தாவுவது போலவும் ஓணான், பாம்பு, அட்டை, ஆமை போலவும் அசையும். இவ்வசைவுகள் நோய்களின் தன்மைக்கேற்ப அமையும். சுகதேகியின் தேகத்தில் பித்தநாடியானது ஆமை, அட்டை போல நடக்கும்.

*"பின்னையோ ஆமை அட்டை பெயர்ந்திடில் பித்தமாகும்"*

(யூகிமுனி)

*"ஏகிய ஆமை அட்டை ,வையென நடக்கும் பித்தம்"*

(அகத்தியர் இரத்தினச் சுருக்கம், செய்யுள்.3)

வாதம், பித்தம், கபம் எனப்படும் முத்தோடங்களின் ஏற்ற இறக்கங்களில் நாம் வாழும் சூழல், காலநிலை ஆகியன செல்வாக்குச் செலுத்துகின்றன. எத்தகைய நிலஅமைவு எத்தகைய தோடத்தில் செல்வாக்குச் செலுத்தும் என்பதனை மிகச் சூட்சுமமாகப் பின்வரும் சித்தர் பாடல் விளக்கியுள்ளது.

*"சேந்தனிடந் தந்திரிக்காம் சீதரனூர் மந்திரிக்காம்*
*ஏந்தவருணன் இடம் ஏந்தலுக்காம் - மீந்த*

*மருத்துவனூர் மூவருக்கும், வாயாது துற்கி,*
*திருத்தலமானாலும் தீ"* (தேரையர் வெண்பா, பா.632)

இப்பாடலைப் பின்வருமாறு கட்டவிழ்ப்புச் செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| சேந்தன் இடம் | - | முருகனுக்குரிய இடம் குறிஞ்சி (மலையும் மலைசார்ந்த இடங்களும்) |
| சீதரன் (ஸ்ரீதரன்) ஊர் | - | திருமாலுக்குரிய இடம் முல்லை (வனமும் வனம் சார்ந்த பகுதியும்) |
| வருணன் இடம் | - | நெய்தல் (கடற்கரை சார்ந்த நிலம்) |
| மருத்துவனூர் | - | இந்திரனின் ஊர் மருதநிலம் (பசிப்பிணி மருத்துவன் அதாவது மழை தருபவன்) |
| துற்கி திருத்தலம் | - | துர்க்கைக்குரிய நிலம் பாலைநிலம் |
| தந்திரி | - | கபம் அல்லது சிலேட்டுமத்தைச் சுட்டும் |
| மந்திரி | - | பித்தத்தைச் சுட்டும் |
| ஏந்தல் அல்லது அரசன் | - | வாதத்தைச் சுட்டும் |

பொதுவாகச் சித்தர் பனுவல்களில் வாதம் - அரசன் என்றும் பித்தம் - மந்திரி என்றும் கபம் அல்லது சிலேட்டுமம் - பின்னவன், இராஜதந்தரி என்றும் பரிபாஷைகளூடு சுட்டப்படுவது மரபாகும். இது வைத்தியர்கள் மட்டுமே அறிந்த குழூஉக்குறி எனலாம்.

*"மன்னனுக்குச் செல்காலம் மந்திரிக்குத் தற்காலம்*
*பின்னனுக்கு மேற்காலம் பேதமில்லை - இன்னபடி*
*ஆனாலும் நாடி யஃததுவா நாடிடிற்*
*றானாண்டை நோயினர்க்குத் தான்"*

(தேரையர் வெண்பா, பா.08)

என்ற பாடலை இதற்குப் பிறிதொரு அகச்சான்றாய் சுட்ட முடியும்.

இப்பொழுது முன்னைய பாடலின் பொருட்புலப்பாடு தெளிவாகும். அதாவது, மலைப்பிரதேசத்தில் வாழ்வோரிடத்தில் 'கபம்' வீறுகொள்ள வாய்ப் புண்டு. வனாந்தரத்தில் வசிப்போர்க்குப் பித்தமும் கடற்கரை

ஓரங்களில் வாழ்வோரிடத்தில் வாதமும் வீறுகொண்டிருக்கும். மருதநிலமே முத்தோடங்களும் முனைப்பின்றி வாழ்வதற்குப் பொருத்தமான நிலப் பகுதியாகும். வரண்ட பாலைநிலத்திலும் முத்தோடங்கள் வீறு பெற்றமைய இயலாது ஆயினும் மிகுதியான வெப்பத்தின் காரணத்தால் அங்கே வாழ்தல் கடினமாகும்.

**படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் பற்றிய பரிபாஷை**

சித்தர் மரபில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் முறையே வாதம், பித்தம், கபம் ஆகிய திரிதாதுக்களுடன் தொடர்புபடுத்தும் வழக்கம் உள்ளது.

*"வாதமாய் படைத்துப் பித்த*
*வன்னியாய்க் காத்துச் சேட்ப*
*சீதமாய் துடைத்து .*" (தேரையர் மருந்து பாரதம்)

இப்பாடலை அறிவியல் நோக்கில் கட்டவிழ்க்க முனையலாம். அந்தவகையில் ஒரு குழந்தை பிறந்து தரையினைத் தொட்ட பின்னர் அதன் தொப்பூழ் கொடி அறுக்கப்படுகிறது. இதன் பின்னர் குழந்தை தனது வாயைத் திறந்து அழ வேண்டும். இல்லையெனில் அது இறந்துவிடும். இதனாலேயே அழாத குழந்தையைக் கிள்ளி விட்டாவது அழவைப்பர். இதுவரையில் தாயின் மூலமாகப் பெற்றுவந்த பிராணவாயுவை இனிமேல் தனது வாயின் மூலமாகப் (பிறந்தவுடன்) பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். குழந்தை வாயைத் திறந்து அழ ஆரம்பித்தவுடன் வெளிக்காற்று அதன் வாய்வழி சென்று நுரையீரலை நிரப்புகிறது. அந்தவகையில் வாதமே மனித இயக்கத்தின் முதற்காரணமாக ஆகிறது. இதனாலேயே "வாதமாய் படைத்து" என்றார்.

பித்தம் ஆகிய அழல் அல்லது வெம்மையே உயிர்க்கலங்களைக் குறிப்பிட்ட காலம்வரை பாதுகாக்கின்றது. "பித்தம் அடங்கினால் பேசாமல் போய்விடு" என்ற சித்தர் மறைமொழியும் இங்கு கவனிக்கத்தக்கது. உடற்சூட்டைப் பேணுவது பித்தமாகும். இதனாலேயே "பித்த வன்னியாய் காத்து" என்றார். (வன்னி - தீ அல்லது அழல்)

அது போன்றே Excretory System எனப்படும் கழிவகற்றும் அமைப்பிற்கு ஆதாரமாக கபம் அமைகிறது. வியர்வை, சிறுநீர், மலம் ஆகியவற்றின் வெளியேற்றம் சீததத்துவமாகிய கபத்தினால் முன்னெடுக்கப்படுகிறது. இதனாலேயே "சீதமாய்த் துடைத்து" என்றார்.

**மூலிகைப் பரிபாஷை**

சித்தர் பனுவல்கள் மிக எளிமையாகக் கிடைக்கக்கூடிய மூலிகை வர்க்கங் களைக் கூடப் பரிபாஷையாகவே பெரும்பாலும் பதிவு செய்துள்ளன. அபக்குவர் அறியக்கூடாது என்பதுடன் இது சித்த வைத்திய மரபின் "குழு உக்குறி" ஆகவும் திகழ்ந்தமை அவதானிக்கத்தக்கது.

இதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் பின்வருமாறு

| | மூலிகை | | சித்தர் பரிபாஷை |
|---|---|---|---|
| 1. | வல்லாரை | - | சரஸ்வதி |
| 2. | கற்றாழை | - | குமரி / கன்னி |
| 3. | குப்பைமேனி | - | பூனை வணங்கி |
| 4. | துளசி | - | மால்தொடை |
| 5. | அத்திப்பால் | - | யானைப்பால் |
| 6. | வெள்ளரிவிதை | - | மால்விந்து |
| 7. | அபின் | - | எட்டுக்குப் பின் (தமிழில் 'அ' - 8ஐக் குறிக்கும்) |
| 8. | சுக்கு, மிளகு, திப்பிலி | - | திரிவிடம் (விடம் - மருந்து) |
| 9. | வெட்டிவேர் | - | குரு வேர் |
| 10. | கோரைக்கிழங்கு | - | பன்றிமீட்டான் |
| 11. | முசுமுசுக்கை | - | இருகுரங்குக் கை |
| 12. | உடும்பு | - | தடி |
| 13. | வெற்றிலை | - | நாகவல்லி |
| 14. | திப்பிலி | - | காமன் |
| 15. | பொன்னாங்காணி | - | சீதை |
| 16. | பாதரசம் | - | சிவன், விந்து |
| 17. | ஆமை | - | ஒடுக்கான் |
| 18. | சந்தனம் | - | ஏகாந்தம் |

(சுப்பிரமணியன், சக்தி, பி:2000:28)

**மாலைக்கண் நோய்க்கான மூலிகை மருந்துக்கலவை**

மாலைக்கண் நோயைக் குணப்படுத்தவல்ல மருந்தைத் தயாரிப்பதற்கான மூலிகை விபரத்தையும் வழிமுறையினையும் பின்வரும் தேரையர் வெண்பா பரிபாஷையாகச் சுட்டியுள்ளது.

*"மாறன்றாரின் வேர் மயிலவ னாயுதவேர்*
*கூறுமொரு நீவியினாற் கூட்டியே - நீறு*
*வெண்ணெயுடன் தண்ணில்மதி மேலுமிட நீ வந்த*
*கண்ணன்கண் ணாம்மாலைக் கண்"*

(தேரையர் வெண்பா, பா.492)

இப்பாடலினைக் கட்டவிழ்ப்புச் செய்யும்போது,

| | |
|---|---|
| மாறன் தார் | - பாண்டியனின் மாலை அதாவது வேம்பு |
| வேர் | - அதாவது வேம்பின் வேர் |
| மயிலவனின் ஆயுதம் | - வேல் |
| வேர் | - வேல மரத்தின் வேர் |

எனக் குறிப்பறிந்து பொருள்கொள்ள வேண்டும்.

இனி இலகுவாகப் பாடலின் பொருள் அவிழும். அதாவது வேம்பினது வேர் மற்றும் வேல மரத்தின் வேர் இரண்டையும் குடுவையில் இட்டு எரித்து நீறாக்கி வெண்ணெயில் கலந்து கண்களில் மாலைக்கண் மறைந்து திருமாலின் கண்போல் கண்கள் ஒளிவீசும்.

**வயிற்றுக் கடுப்பு அல்லது சூலை நோய்க்கான குடிநீர்**

*"ஆனைக்கன்றில் ஒருபிடியும் அசுரர் விரோதி இளம் பிஞ்சும்*
*கானக்குதிரை மேற்றோலும் காலில் செருப்பாய் மாட்டியதும்*
*தாயைக் கொன்றான் தனிச்சாற்றில் தயங்கிக் காய்ச்சிக் குடிப்பீரேல்*
*மானே பொருதும் விழியானே வடுகும் தமிழும் குணமாமே"*

(ஆகடிய காவியம், ப.61)

இப்பாடலில் இடம்பெறும் பரிபாஷைகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| ஆனைக்கன்று | - | அத்திப்பிஞ்சு |
| அசுரர் விரோதி | - | முருகன் |
| இளம் பிஞ்சு | - | முருக்கம் பிஞ்சு |
| கானக்குதிரை மேற்றோல் | - | "மா" மரத்தின் பட்டை |
| காலில் செருப்பாய் மாட்டியதும் | - | செருப்படி (ஒரு வகை மூலிகை) |
| தாயைக் கொன்றான் தனிச்சாறு | - | வாழைத்தண்டைப் பிழிந்த சாறு |

வடுகும் தமிழும் குணமாமே - தமிழைத் தெலுங்கர்கள் பேசும் போது வயிற்றுவலியுடையோர் முனகுவது போல் இருக்குமாம் (எள்ளி நகையாடுதல்) அதாவது வயிற்றுவலி குணமாகும்.

வயிற்றுவலி நீங்குவதற்காக அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, மாம் பட்டை, செருப்படி, வாழைச்சாறு ஆகியவற்றைக் கொண்டு தயாரிக் கப்படும் குடிநீர் தொடர்பிலேயே இச்சித்தர் பாடல் பிரஸ்தாபித்துள்ளது.

### முப்பு

சித்தர் மரபில் பரிபாஷைகளூடாகப் பேசப்படுகின்ற கருத்தியல்களில் முப்பும் ஒன்றாகும். வைத்தியம், இரசவாதம், யோகம் ஆகிய மூன்றுடனும் ஏககாலத்தில் "முப்பு" தொடர்புறுகிறது.

அண்டக்கல், இந்திரகோபம், மதிரவி, விண்கொள்ளாச் சுண்ணம், ஆதியந்தம், சிப்பி, நத்தை, பச்சைமலைப்புளி, கடுங்கோழி, குருவண்டு, திகைப்பூச்சி, வழலை, சல்லிவேர், கோஜபீஜம், சவர்க்காரம், கும்பிடுக்கல், தலைப்பிண்டம், கோரை, மகாமரப்பூ, பனிக்குடம் முதலிய பரிபாஷைகளால் "முப்பு" சித்தர் பனுவல்களில் குறிப்பிடப்படுகிறது. (பலராமய்யா, வி., 1977:22)

மூன்றுவகை உப்புக்களின் சேர்க்கை என்ற தொனிப்பொருளில் மூவுப்பு என்பது மருவி முப்பு என வழங்கலாயிற்று.

பௌதிக நிலையில் பிரபஞ்ச இயற்கையில் நெருப்பு, நீர், நிலம் ஆகியவற்றின் தன்மைகள் ஆகாசத்தில் இருந்து வீழும் இடியால் நிலத்தில் அமைந்து சந்திரனின் ஒளியால் ஜீவசத்தூட்டப்பட்டு புவியின் சிற்சில இடங்களில் சில குறிப்பிட்ட காலங்களில் உவர்ப்படையாத பூப்பாறையே "முப்பு" எனச் சித்தர் பனுவல்கள் சுட்டுகின்றன.

சித்த மருத்துவ மரபில் "முப்பு" என்பது பிரபஞ்ச இயற்கையில் நிகழ்ந்த அசாதாரண நிகழ்ச்சிகளால் (எரிகல், இடிவிழுதல், பெருவெடிப்பு) விளைந்த அதிசயமான வேதிப்பொருளாகக் கருதப்படுகிறது. வினைத்திறன் மிக்க "காரசாரம்" எனப்படும் காரவகை உப்புக்களின் கலவையாக இது அறியப்படுகிறது.

பேரண்டத்தின் சிறிய துகள் என்ற வகையில் "அண்டக்கல்" எனச் சுட்டப்படுகிறது. இடிமின்னல் முதலிய நிகழ்ச்சிகளால் விளைவதால் இந்திரகோபம் என்றும் சந்திரனின் ஒளியில் விளைவதால் மதிரவி என்றும் நிலத்தின் மேற்பரப்பில் பனித்துளிகளைப் போலப் பூத்திருப்பதால் பனிக்குடம் என்றும் சுட்டப்பட்டது.

உவர்மண் தரையிலே ஆகாயத்திலிருந்து இடிவீழ்ந்த சந்தர்ப்பமொன்றில் விளைந்த அண்டக்கற்கள் நிலத்தில் இரண்டு முதல் ஐந்தடி ஆழத்தில் காணப்படும். இவை சந்திரனின் ஒளிக்கதிர்களால் வினைத்திறன் கூட்டப்பட்டு மெருகேறும். இதனால் முப்பை மதிவிந்து, மதிரவி என்றும் சித்தர் பனுவல்கள் சுட்டுகின்றன. இவ்வாறு பத்து மாதங்கள் சென்ற பின்னர் தை, மாசி, பங்குனி மாதங்களின் நிறைமதி நாளில் பனிக்காற்றால் பூமிக்குள் விளைந்திருந்த முப்பானது திரள்திரளாக வெளிவரும். இதனாலேயே முப்பை "பாதாள மூலி" என்பர்.

*"பாதாள மூலியடியடி பாடாணம் தான் சேர்ந்து"*

(அழுகணிச்சித்தர், பா.22)

*"தானென்ற அண்டபிண்டக் குரு."*

(அகத்தியர் முப்பு வழலைச் சூத்திரம்)

*"வாதமென்ன முப்பு என்ன*
*வந்த வரலாறு என்ன*
*பூதமஞ்சினாலுதித்த பூரணத்தைக் காண்கிலரே"*

(திருவள்ளுவர் ஞானவெட்டியான்)

*"வளமையென்ற அண்டமென்றால் முட்டையல்ல*
.................................
*சமாதிநிலை யூணுப்புகத் தானுமில்ல*

*வெடியுப்பு கறியுப்பு விஷநீரல்ல*
*ஏதென்றாற் பஞ்சபூதத்திலாம் என்றே"*
(முப்பு வழலைச் சூத்திரம், பா.12)

மருத்துவப் பயன்பாட்டு நிலையில் "முப்பு" கலச்சிதைவைத் தடுக்கும் கற்ப மருந்தாகக் கருதப்படுகிறது. தீரா இளமையாகிய காயசித்தியும் முப்பால் கிட்டும் என்றும் நரை திரை ஆகியவற்றைப் பாம்பானது தனது பழைய செட்டையை உரிப்பது போன்று முப்பின் மூலம் மாற்றிக்கொண்டு கற்பதேகம் பெறலாம் என்ற கருத்துள்ளது. இதனாலேயே ஆதியந்தம், சர்வலோக ஏகசித்தி முதலிய பெயர்களால் முப்பானது அகத்தியரால் சுட்டப்பட்டுள்ளது.

முப்பைக் கலந்து செய்யப்படும் மருந்துகள் புற்றுநோய், முடக்குவாதம் போன்ற கொடூர நோய்களிலிருந்து பாதுகாக்கவல்லன எனச் சித்தர் பனுவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இரசவாத வித்தையில் "முப்பு" இரசமணியைக் கட்டவல்ல ஆற்றல் உள்ளதாகக் கருதப்படுகிறது. இரசமணிக்கட்டின் மூலம் பெறப்படும் தாயத்து அல்லது கவசத்தினால் காயசித்திகளைப் பெறமுடியும் என்பது சித்தர் பனுவல்களின் எண்ணக்கருத்தாகும்.

## இரசவாதம்

ஆயகலைகள் அறுபத்து நான்கில் ஐம்பத்து நான்காவது கலையாக இரசவாதக்கலை இந்துமரபில் அறியப்படுகிறது. இரசவாதம் என்பது தமிழ் சித்தர் மரபில் 'வகார மார்க்கம்' என்றழைக்கப்படுகிறது. வகாரம் - வங்காரம் என்பதன் திரிபு ஆகும். இது தங்கம் அல்லது பொன்னைச் சுட்டிய பெயராகும். சித்தர்களை ரசவாதிகள் என்று கருதும் போக்கு இந்துப்பண்பாட்டு மரபில் உள்ளது. இரசவாதத்தில் முக்கிய பங்கு வகிக்கின்ற பாதரசத்தைச் 'சித்தரசம்' என்று அழைக்கின்ற மரபும் தமிழகத்தில் நிலவுகிறது. இதிலிருந்து சித்தர் மரபில் இரசவாதம் பெற்றுள்ள முக்கியத்துவத்தினை உணரமுடியும்.

பொதுவாக இரசவாதம் என்பது இரும்பைத் தங்கமாக்குதல் என வெகுசன வழக்கில் அறியப்பட்டாலும் அடிப்படையில் இதன் தாற்பரியம் காயசித்தி உபாயங்களுடனும் காயகல்பம் மற்றும் தீராதநோய்களுக்கான மருத்துவத் தீர்வுகளுடனும் தொடர்புடையது. அதுமட்டுமன்றி இரசவாதம் ஞானநோக்கம் குறித்தும் நிகழ்த்தப்படும்.

*"தானென்ற ஞானிக்குக் குளிகையுண்டு"* - அகத்தியர்

*"ஓடலாம் அட்சயமாம் இரசத்தை கேளு*
*ஆடலாம் அட்டமா சித்தியெட்டும்"* -கொங்கணர்

*"வெண்தலையில் ரசம்வைத்து ஐந்து லோகத்தையும்*
*வேதித்து விற்றுண்ணலாம்"* - தாயுமானவர்

ஆகிய சித்தர் பாடலடிகள் குறித்த நோக்கங்களைப் பற்றியே குறிப்பால் உணர்த்தியுள்ளன.

*"செம்பு பொன்னாகும் சிவாய நமவென்னில்*
*செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்"*

எனத் திருமூலரும் இதனைச் சுட்டியுள்ளார். கோரக்கர், சிவவாக்கியர், பின்னாளில் வள்ளலாரும் இக்கலையை மக்கள் முன் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். பாதரசம் இச்செயற்பாட்டில் மிக முக்கிய பங்கினை வகித்ததால் இக்கலை இரசவாதம் எனப்பட்டது. பெறுமதி குறைந்த ஈயம், செம்பு, வெள்ளி, இரும்பு ஆகியவற்றைத் தங்கமாக்குதல் மற்றும் பாதரசத்தை ஸ்படிகமாக்குதல் (இரசமணி, இரசக்கட்டு) என இரண்டு நிலைகளில் இரசவாதம் அறியப்பட்டுள்ளது. இரசவாதமானது செய்முறை அடிப்படையில் நாதவேதை இரசவாதம், காந்தரசவாதம், உலோகரச வாதம் எனப்பொதுவாக 3 வகைப்படுத்தப்படும்.

இரசவாதச் செயன்முறைகளில் அயத்துக்குருக்கி எனப்படும் காட்டாமணக்கு, இரும்பறுப்பி எனப்படும் கல்லி இரும்பிலை, இரும்பு நீற்றி எனப்படும் எருக்கிலை, ஈயங்கட்டி எனப்படும் கரியபோவைப்பூ, இரும்பிலிச்செடி, இரசம்தாக்கி எனப்படும் பெரிய முள்ளங்கிச்செடி

ஆகிய மூலிகைகளும் முக்கிய சேர்மானங்களாய் திகழ்ந்துள்ளன. மேலும் இரசவாதவித்தையில் கந்தகம், பாதரசம், முப்பு ஆகிய மூன்று பிரதான இரசாயனப் பொருட்களின் கலவை பிரதான இடம் வகிக்கிறது. இவை பல்வேறு விகிதாசாரங்களில் இரசவாதச் செயன்முறைகளில் பயன் படுத்தப்பட்டுள்ளன. (இரசவாதத்தின் செய்முறை விளக்கங்கள் குறித்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் அன்று) (பிரம்மதண்டி,ம.சு:2006:25)

இரசவாதத்தின் மூலம் பெறப்படும் தங்கம் அடிப்படையில் உலோகப் பெறுமதியுடையதென்று எண்ணுவது மிகத்தவறான முற்கற்பிதமாகும். அது காயகல்ப மருந்துகளுக்கான பிரதான மூலப்பொருளாகும்.

*"தங்கமே ஆச்சுதென்று கெர்விக்காதே தளராமல் காயத்தை சித்தி பண்ணு*
*பங்கமே வராமல் தினம் பணந்தானுண்டு பளபளக்கும் உடம்பெல்லாம்*
*பாலையாவாம் அங்கமே சரீரமது பவளம் போலாம்*
*அரனுண்ட கற்பமிது யானும் உண்டேன்*
*இங்கமே சிவனென்பார் நரை நோயில்லை...."*

(போகர் 7000, பா. 551.)

"தங்கம்" என்பது கல்பதேகத்தையும், "இரும்பு" என்பது சாமானிய மனித உடலையும் சுட்டும் சித்தர் பரிபாஷைகளாகும். மேலும் இரசக்கட்டு என்பது பரம்பொருளில் உறைதலின் குறியீடாகும். ஈசனின் விந்து என அழைக்கப்படுகின்ற பாதரத்தைப் பக்குவப்படுத்திப் புடம்போட்டால் இரசபதங்கம், இரசபற்பம், இரசசெந்தூரம் எனப் பலவிதமான மருந்துகளை உருவாக்கலாம்.

இத்தகைய அரிய மருத்துவ குணங்கள் நிரம்பிய பாதரசத்தை மணியாகக் கட்டித் தாயத்தாக உடலில் அணிந்து கொண்டால் மகோன்னதமான பலன் கிட்டும் என்பது சித்தர் மரபுவழிவந்த நம்பிக்கையாகும். இதனையே ரசமணி சூட்சுமம் என்பர். ரசமணித்தாயத்தால் திரிதோசங்கள் சமநிலைப் படுத்தப்படுவதோடு பெண் போகத்தில் விந்துஜயமும், குண்டலினி யோகத்தில் ககனசித்தியும் கிட்டும் என்ற நம்பிக்கைகளும் உண்டு.

அந்தவகையில் இரசவாதம் என்ற சித்தர்களின் மரபறிவியல் வெறுமனே உலோகங்கள் மீது செயற்படுவது மட்டுமல்ல அது ஆன்மாவின் மீதும் தேகத்தின் மீதும் செயற்படுவதாகும். தாழ்ந்த உலோகத்தினை உயர்ந்த உலோகமாக மாற்றுதல் போன்றே பிணிவசப்பட்ட தேகத்தை கற்ப தேகமாக மாற்றச் சித்தர்கள் ரசவாதத்தினூடாக முயன்றுள்ளனர். அந்த வகையில் சித்தர்கள் யோகசாதனையையும் ஆன்மிக ரசவாதம் என்றே சுட்டியுள்ளனர். இந்துப் பண்பாட்டு மரபில் பொன் என்பது மூப்பற்ற தன்மையின் குறியீடாகவும் காலதீதப் பண்பின் குறியீடாகவும் கருதப்படுகிறது.

பாதரசம் என்பது அமிர்தத்தன்மை அதாவது சாகாக்கலையின் குறியீடாகும்.

*"பரியான தங்கமடா பரப்பிரம்மம் ஆச்சு*
*பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்"*

(அகத்தியர் அந்தரங்க தீட்சாவிதி பா.411.)

அந்தவகையில் சித்தர்கள் இரசவாதக்கலையூடாக நிலையற்ற ஒன்றி லிருந்து நிரந்தரத்துவத்தைச் சாதிக்க முனைந்திருக்கின்றனர் என்கிற யதார்த்தமே புலப்பட்டு நிற்கிறதெனலாம்.

**மருத்துவப் பெறுமதியுடைய தங்கம்**

சித்தர்கள் தங்கத்தைப் பல்வேறு வடிவங்களில் பலவிதமான பிணிகளுக்கு மருந்தாகப் பரிந்துரைத்துள்ளனர். "சித்த மஹாத்வஜம்" எனப்படும் தங்கபஸ்பம் இவற்றுள் தலையாயது. ஈளை, இருமல், இரத்தகாசம் (காசநோய்), நரம்புத்தளர்ச்சி, மேகவியாதிகள், இரத்த அழுத்தம் போன்றவற்றைக் குணமாக்கக்கூடிய வல்லமை தங்கபஸ்பத்துக்குள்ளது.

*"பேசுகிறேன் தங்கம் ஒரு பலம் தான் வாங்கி*
*பெலக்கவே தகடு செய்து வில்லையாக*
*வீசுகிறேன் நறுக்கி அதன் மேலே கேளு*
*விருந்தான விலையரைத்து பொதிந்து நன்றாய்*
*தேசியுடன் கட்டி நூறு எருவில் போட்டால்*

*செப்பரிய தங்க புடம் உருகி நீறும்*
*ஆசியம் வியாதிகளுக்காகச் சொன்னேன்*
*அதில் முக்கால் புடம் போட பதமாம் நீறே"*

(போகர் வைத்தியம், பா.700)

ஒரு பலம் தங்கத்தை மெல்லிய கெட்டியான தகடாக மாற்றி, பின்னர் அதை வில்லை வில்லையாக நறுக்கிக் கொள்ள வேண்டும். அந்த வில்லைகளின் மேல் கருந்துளசி இலைகளை அரைத்துப் பொதிய வைத்து அவற்றை நூறு எருவில் புடம்போட்டால் பற்பமாகும். அதையே முக்கால் புடம் (எழுபத்தைந்து எரு) போட்டால் நல்ல பதமான தங்கபற்பம் கிடைக்கும் என்பதே இப்பாடலின் பொருளாகும். இப்பாடலில் இடம்பெற்றுள்ள,

*"ஆசியம் வியாதிகளுக்காகச் சொன்னேன்"*

என்ற செய்யுள் அடி இரசவாதத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தி நிற்பதைக் காணலாம்.

அலோபதி மருத்துவத்தில் சில நோய்நிலைகளில் தங்கத்தை ஊசி மூலம் மருந்தாக ஏற்றப்படுவதுண்டு.

மேலைத்தேய மருத்துவ வரலாற்றில் (அலோபதி) காசநோய், வலிப்பு நோய் மற்றும் கீல்வாதநோய் (Rheumatoid arthritis) ஆகியவற்றுக்கு ஏற்றப்படும் மருந்துக் கலவையில் "தங்கம்" முக்கிய பங்கெடுத்துள்ளது. அந்தவகையில் காசநோய் பற்றிய ஆராய்ச்சிக்காக 1905 இல் மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற றொபேட் கொச் (Robert Koch) என்ற ஜேர்மானிய அறிவியலாளர் காசநோய்க்கான மருந்தாக Gold Cyanide K(Au(CN))2 ஐ ஊசி மூலம் பயன்படுத்த முனைந்துள்ளார். இவருடைய மருந்தே காசநோய்க்கான ஒரே மருத்துவமாக ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் வரையில் அலோபதி மருத்துவத்தில் பின்பற்றப்பட்டிருந்தமையும் நோக்கற்பாலது.

"Robert Koch (1843-1910) is one of the greatest biologists of his time. He received the Nobel Prize of medicine in 1905 for his research on

tuberculosis (he discovered the causative agent of this disease). During his work on M. Tuberculosis, in 1980, Robert Koch discovered that gold cyanide, K[Au(CN)2], was bacteriostatic towards this agent of tuberculosis. Back then, no treatment existed for tuberculosis and therefore, within a span of 10 to 15 years, the whole world used gold as the golden standard to treat tuberculosis."  (Healy, M. L., Lim, K. K. & Travers:2009: 145–148 )

Jucques Forestier என்ற பிரான்ஸ் நாட்டு மருத்துவர் ஒருவர் 1928 இல் கீல்வாத நோய்க்கான மருந்தாகத் தங்கத்தைப் பயன்படுத்தி வெற்றி கண்டார். இவர் 50mg Gold thiopropanal Sodium Sulphonate (Allochrysine) என்ற மருந்தை ஊசி மூலமாக கீல்வாத நோயாளிகளுக்கு வாரந்தோறும் ஏற்றிச் சிகிச்சையில் பலன் கண்டார். 1960 இல் Empire Rheumatism Council தனது ஆய்வறிக்கை மூலமாக கீல்வாத நோய்க்கு Gold Therapy எனப்படும் மேற்படி சிகிச்சை முறையினை அங்கீகரித் தமையும் நோக்கற்பாலது.

"Jacques Forestier, a French physician, was the first person to report it in 1928. He treated his patient with 50 mg of gold thiopropanol sodium sulphonate (Allochrysine) as weekly intramuscular injections"

(THE RESEARCH SUB-COMMITTEE OF THE EMPIRE RHEUMATISM COUNCIL. Gold therapy in rheumatoid arthritis. FINAL REPORT OF A MULTICENTRE CONTROLLED TRIAL. Ann. rheum. Dis. 20, 315 (1961)

சமகாலச் சூழலில் நனோ தொழில்நுட்பம் வளர்ந்து வரும் நிலையில் Gold nano துணிக்கைகள் (GNPs) புற்றுநோய் சிகிச்சை தொடர்பான மருத்துவ ஆய்வுகளில் மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக உடலில் புற்றுநோய் கலங்களை மிகமிக ஆரம்ப காலகட்டத்திலேயே இனங்கண்டு கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நோயை இலகுவாகக் குணப்படுத்த இயலும் என்கிற கோணத்தில் நவீன ஆய்வுகள் பயணிக்கின்றன.  (Loutfy, H., Madkour:2018)

எனவே இரசவாதம் மூலம் சித்தர்கள் ஈட்டும் தங்கத்தை மருத்துவ நோக்கில் பயன்படுத்த முடியும் என்கிற கருத்தியல் வெறுமனே ஐதீகமோ அன்றி அற்புதமோ அன்று. அறிவியல் ரீதியாக நிரூபிக்கக்கூடிய ஒன்றேயாம்.

**நிறைவாக**

முண்ணான் மூளை மண்டலத்தில் ஏற்படுத்தப்படும் நேர்முக அதிர்வுகள், ஹைபோதலமஸ், பீனியல்சுரப்பி, பிட்யூட்டரின் சுரப்பி போன்றவற்றின் நிறைவான செயற்பாடுகள் உயிர்ப்பாற்றலைத் தூண்டி பிரபஞ்ச மையத்தின் பேராற்றலுடன் பிணைவிக்கக்கூடியதும் அப்பேராற்றலை உணரக்கூடியதுமான நிலைக்கு மனிதர்களை மடைமாற்றுகின்றன. இதனையே சித்தர்களின் உடற்கூற்றியல் சார்ந்த பரிபாஷைகள் பல்வேறு கோணங்களில் அடையாளப்படுத்தியுள்ளன.

சித்த மருத்துவத்துக்கே உரிய நாடிப்பரீட்சை முறைமைகள், அரிய மூலிகைகள் பற்றிய தகவல்கள் பக்குவம் இல்லாதவர் கையில் கிடைக்கும் பொழுது மனித குலத்துக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படும். இதனைத் தடுக்கும் முகமாகவே சித்த மருத்துவ பரிபாஷைகள் சித்தர் பனுவல்களில் இடம்பெற்றுள்ளன.

சித்தர் பரிபாஷைகள் அதிகம் பிரயோகிக்கப்பட்டிருக்கும் பிறிதொரு அறிவுப்புலம் இரசவாதம் ஆகும். பாதரசத்தை முதன்மையாகக் கொண்டு சில வேதியியற் பொருட்களைப் பயன்படுத்தி "இரும்பைத் தங்கமாக்கும்" வித்தை இதுவாகும். இந்தத் "தங்கம்" என்பது விற்பனைப் பண்டமல்ல. இது மருத்துவப் பெறுமதியுடையது. அழியும் பொருளாகிய தேகத்தை தங்கத்தைப் போன்று கல்ப தேகமாக்குவதற்குரிய வழிமுறைகளைப் பேசுவதே இரசவாதத்தின் தாற்பரியமாகும்.

இரசவாதத்தைப் போன்றே "முப்பு" என்ற கருத்தியலும் மருத்துவப் பெறுமதியுடையது. சித்த மருத்துவத்தில பிரயோகிக்கப்படும் அதியுயர் ரகசிய மருந்தாக இது பயன்படுகிறது. புற்றுநோய், பாரிசவாதம் முதலிய ரோகங்களைக் குணப்படுத்த வல்லதாகவும் இளமையை மீட்க

வல்லதாகவும் "முப்பு" கருதப்படுகிறது. இவை குறித்த அத்தனை விடயங் களையும் சித்தரிலக்கியங்கள் மிகவும் சூட்சுமமான பரிபாஷை களினாலேயே பேசியுள்ளமை நோக்கற்பாலது.

நன்றி.......

பின்வரும் பாடல் இந்த நினைவுப் பேருரையின் சாரத்தை ஓர்விருத்தத்தில் சொல்லிப் போகிறது. கட்டவிழ்த்துப் பாருங்கள்.....

*உண்கலாம் பிரமத்திலடங்கும் போதே*
*உறுதியுள்ள அண்டத்தில் உருகிப் பாயுந்*
*திங்கலாந் தோணுமடா அமிர்தச் சீனி*
*தித்திப்புப் பாலுடனே திடமாய் மைந்தா*
*தங்கலாந் தேகமது அறியாமற்றான்*
*சட்டையுமே கழன்று மிகத் தங்கம் போலே*
*பொங்கலாம் மெய்ஞ்ஞான தீபத்தாலே*
*பூரித்துப் பார்த்திடவே புவனம் ஒன்றே*

(காகபுசுண்டர் பாடல் 31)

## உசாத்துணை நூற்பட்டியல்

அண்ணாமலை, சுப., (Critical edition), *திருமூலர் திருமந்திரம்,* இந்தியப் பண்பாடு - ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

ஆறுமுகசுவாமிகள் (பதிப்), (1963), *அகத்தியர் அமுதக்கலை ஞானம் - 1200,* முத்து பதிப்பகம், மதுரை.

இராமச்சந்திரன், எஸ்.பி., (1997), *சித்தர் உடல் தத்துவம்,* தாமரை நூலகம், சென்னை.

இராமநாதன், (பொன்), (2008), *சித்த மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்,* ஸ்ரீ சாயி பிறின்டர்ஸ், கொக்குவில்.

........ (2009), *மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்,* ஸ்ரீ சாயி ஒவ்செற் பிறின்டர்ஸ், கோண்டாவில்.

.................................... (2009), *மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்,* யாழ்ப்பாணம்.

குழந்தை வேலுப்பிள்ளை, மு., (பதிப்), (1929), *அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குருநூல்,* ஸ்ரீ இராமச்சந்திர விலாசம் பிரஸ், சென்னை.

கோவேந்தன், (பதிப்), (1989), *பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும்,* திருமகள் நிலையம், சென்னை.

சதாசிவம், மு., (2014) (பதி), *சித்த மருத்துவ ஆய்வுக்கோவை,* சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

சம்பங்கி ஞானஜோதி, (2002), *திருமந்திரம் புகட்டும் நலவாழ்வு,* ஞானதீபம் பதிப்பகம், சென்னை.

சரவணமுத்துப்பிள்ளை, (பதி), *பதினெண் சித்தர்கள் பெரியஞானக் கோவை*, ரத்தினநாயகர் வெளியீடு, சென்னை. (ஆண்டு குறிப்பிடப் படவில்லை)

சாமி சிதம்பரனார், (1961), *சித்தர் கண்ட விஞ்ஞானம், தத்துவம்*, சென்னை.

சிவசண்முகராஜா, சே., (2002), *சித்த மருத்துவ மூல தத்துவம்*, சித்த வளஉச்சிக் கழகம், யாழ்ப்பாணம்.

சிவானந்தா, ஸ்ரீ., (2006), *குண்டலினி சக்தி என்றால் என்ன*, சிவானந்தா ஆஸ்ரமம், தமிழ்நாடு.

சுகமார், P., (2006), *சித்த ரகசியம்*, நலம் வெளியீடு, சென்னை.

சோமசுந்தரம், மீ.ப., (2004), *சித்தர் இலக்கியம் முதல் பகுதி*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை.

......... (2004), *சித்தர் இலக்கியம் இரண்டாம் பகுதி*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை.

..............(2004), *சித்தர் இலக்கியம் மூன்றாம் பகுதி*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை.

தயாளினி,தி., வித்தியா,மி.பி, (2020), *சித்த மருத்துவத்தில் நாடி*, சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தன்வந்திரி, (1993), வைத்தியக் குருநூல் - *200*, தாமரை நூலகம், சென்னை.

திலகேஸ்வரி, கு., (2011), *மூலதத்துவம்*, சித்த மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருவள்ளுவ நாயனார், (1992), *பஞ்சரெத்தினம் - 500*, பாலகிருஷ்ணன் வெளியீடு, சென்னை.

திருவள்ளுவர், (1993), *நவரத்தின சிந்தாமணி*, தாமரை நூலகம், சென்னை.

தெய்வநாயகம், சி.கோ., (1979), *சித்தர் சிந்தனைகள்*, தஞ்சை.

தேவநாத சுவாமிகள், (2005), இந்தியப் பெருஞ்சித்தர்கள் ஆறுபேர், நர்மதா பதிப்பகம், சென்னை.

நாராயணன், க., (1988), *சித்தர் தத்துவம்*, புஸ்தக மந்திர், புதுச்சேரி.

நாராயணன், க., (1998), *சித்தர் தத்துவம்*, மாரி பதிப்பகம், கோட்டு பாளையம், புதுச்சேரி

பலராமய்யா, வி., (1977), *முப்பூகுரு*, அருட்பெருஞ்சோதி பதிப்பகம், சென்னை.

பிரம்மதண்டி, ம.சு., (2006), *ரசமணி சூட்சும ரகசியங்கள்*, கற்பகம் புத்தகசாலை, சென்னை.

போகமுனிவர், (1997), வயித்தியம் - 700, பி.இரத்தின நாயகர் அன்ட் சன்ஸ், சென்னை.

மலர், அ., (2002), மெய் பொய்யன்று, தி.பார்க்கர் வெளியீடு, சென்னை.

மகாலட்சுமி, தி., (1996), சோதிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மணியன், ப.சு., (2004), *சித்தர் நெறிகளும் சித்தி முறைகளும்*, விஜயா பதிப்பகம், சென்னை.

மாணிக்கவாசகர், ,ரா., (1982), *சித்தர்கள் பரிபாஷை அகராதி*, அன்னை அபிராமி அருள், சென்னை.

மாதவன், வே.(பதிப்), (1994), *அகத்தியர் வைத்திய காவியம் - 1500*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ராமநாதன், அரு., (பதி), *சித்தர் பெரிய ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள் (இரு தொகுதிகள்)*, பிரேமா பிரசுரம், சென்னை.

ரிஷபானந்தர், (2014), *சித்தர்கள் கண்ட மானுட ரகசியம்*, அழகு பதிப்பகம், சென்னை.

வரதராஜன், G., (உரை : மூன்று பாகங்கள்), *திருமூலர் திருமந்திரம்*, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

வழித்துணைராமன், ஏ.எஸ்., (2010), *பாம்பாட்டிச்சித்தர் தத்துவம்*, சங்கர் பதிப்பகம், சென்னை.

வாசுதேவன், இர., (2006), *தமிழில் மருத்துவ இலக்கியங்கள்*, பூங்கொடி பதிப்பகம்,சென்னை.

வெங்கட்ராமன், டி.வி., (1996), *திருமந்திர அனுபவ உரை*, பாரதி பதிப்பகம், சென்னை.

Anandan, T., (1996), On *Mental disease,* Heritage of Tamils Siddha Medicine, Chennai.

Chatterjee, C.C., (2018), *Human Physiology Volume 2,* CBS Publishers, New Delhi.

Douglas Harper, (2018), *"Pineal (as an adjective)"*, Online Etymology Dictionary, Retrieved 27 October 2018.

Harish, Johari, (1987), *Chakras,* Destiny Books, New Delhi.

Healy> M. L., Lim, K. K. & Travers, (2009), *R. Jacques Forestier (1890-1978) and gold therapy,* Int. J. Rheum. Dis. 12, 145–148 (2009))

Lokhorst, G.J., (2018), *"Descartes and the Pineal Gland"*, in Zalta EN (ed.), The Stanford Encyclopedia of Philosophy (Winter 2018 ed.), Metaphysics Research Lab, Stanford University, retrieved 17 December 2019.

Loutfy, H., Madkour, (2018), *"Applications of gold nanoparticles in medicine and therapy"*, Pharmacy & Pharmacology International Journal, Volume 6 Issue 3, eISSN: 2379-6367

Macchi, M.M., Bruce, J.N., (2004), *"Human pineal physiology and functional significance of melatonin"*, Frontiers in Neuroendocrinology. 25 (3–4): 177–195.

Navneet, M., Sanjay, K., (2011), *"The orgasmic history of oxytocin: Love, lust, and labor",* Indian Journal of Endocrinology and Metabolism 2011 Sep; 15(Suppl3): S156–S161.



கலாநிதி சயனொளிபவன் முகுந்தன், நல்லூர், கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். கலைத்துறையைத் தனது விருப்பத்தெரிவாகப் பயின்றவர். பாடசாலைக் காலத்தில் பல்துறைகளிலும் ஆளுமையை வெளிப்படுத்திப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்துக்கல்லூரியின் ஆஸ்திரேலிய மெல்பேர்ண் பழையமாணவர் சங்கப் புலமைப்பரிசிலைப் பெற்றவர். 1997இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புகுந்த இவர் இந்துநாகரிகத்தில் சிறப்புக்கலை பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். நகுலாம்பிகை மகாதேவா புலமைப்பரிசில், சைவ சித்தாந்த ஆத்மலாபநிதி, Dr.ஆனந்தக்குமாரசுவாமி புலமைப்பரிசில், சைவசமயத்திற்கான புலமைப்பரிசில், இந்து நாகரிகத்திற்கான பல்கலைக்கழகப் பரிசு, தம்பையா முதலியார் நிதியம் ஆகியவற்றைத் தனது இளமாணிக் கற்கைப் பெறுபேறுகளின் மூலம் பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியற் கற்கைகளில் முதுகலைமாணிப் பட்டத்தையும் (2004) பேராசிரியர் மா.வேதநாதனின் வழிகாட்டலின் கீழ் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் (2010) பெற்றார். பேராசிரியர் நா.ஞானகுமாரனின் நெறிப்படுத்தலில் "A Comparative Analysis on Cosmology among the Schools of Indian Philosophy with special reference to *Vaisedika*" என்ற தலைப்பில் ஆங்கிலமொழி மூலத்தில் ஆய்வு செய்து 2018 இல் தனது கலாநிதிப் பட்டத்தை இவர் பெற்றுக் கொண்டார்.

2005 செப்ரம்பரில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகக்கற்கைகள் புலத்தில் தகுதிகாண் விரிவுரையாளராக இணைந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகக்கற்கைகள் புலத்தின் இணைப்பாளராகவும் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றினார். கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட Special Award for Dedicated Academic Service என்ற விருதினை 2006/07 காலப்பகுதியில் பெற்றிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையில் 2015 இல் சிரேஸ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 2020-23 காலப்பகுதியில் இந்து நாகரிகத்துறையின் தலைவராகவும் கடமையாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக்கற்கைகள் பீடத்தின் பாடவிதானக்குழு, இந்துக்கற்கைகள் பீடத்தின் ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக்குழு ஆகியவற்றின் தலைவராகவும் பிரதி மாணவர் ஒழுக்காற்று அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். இந்துக்கற்கைகள் பீடத்தின் முதலாவது இந்துமாநாட்டின் இணைப்பாளராகவும் இவர் செயற்பட்டிருந்தார். இந்துக்கற்கைகள் பீடத்தின் ஆய்வுச் சஞ்சிகையாகிய 'தரிசனத்தின்' பிரதம ஆசிரியராகவும் இவர் பணியாற்றுகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புகள் பீடத்தின் சமய மெய்யியற் கற்கைகள் அவையின் (Religion and Philosophical Board of Study) பத்திராதிபராகவும் இவர் தெரிவுசெய்யப்பட்டுப் பணியாற்றிவருகின்றார்.

இந்து கணித வானியல்மரபு, புராதன இந்து இலக்கியங்களில் அரசியல், பொருளியல், நீதிபரிபாலனம், புராதன இந்து சமுதாயத்தில் போரியல், இந்துசமயத்தில் இயற்கை மெய்யியல், வேதாந்த மெய்யியலின் நீட்சியும் நெகிழ்ச்சியும், இந்து நாகரிகம் ஓர் அறிமுகம், இந்துக்கற்கைகளை வளமூட்டிய மேலைத்தேசத்து ஆளுமைகளும் ஆய்வுகளும் ஆகிய ஏழு ஆய்வு நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. இந்நூல்கள் தொடர்பில் 2011 (இந்து கணித வானியல்மரபு), 2014 (புராதன இந்து இலக்கியங்களில் அரசியல் பொருளியல் நீதிபரிபாலனம்) ஆகிய வருடங்களில் சிறந்த ஆய்வுக்கான இலங்கை அரச இலக்கிய விருதுகள் (சாகித்திய மண்டலம்) இவருக்கு வழங்கப்பட்டன. இந்து சமயத்தில் இயற்கை மெய்யியல் (2020) என்ற இவருடைய நூலுக்குச் சிறந்த தத்துவ நூலுக்கான விருது வடமாகாண கல்வி பண்பாட்டு இளைஞர் விவகார விளையாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டது. இவரது புராதன இந்து சமுதாயத்தில் போரியல் (2021) என்ற நூல் சிறந்த ஆய்வுக்கான அரச இலக்கிய விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக அமைந்தமையும் குறிப்பிடற்பாலது. யாழ்ப்பாண வைபவம், சிதம்பர மான்மியம், யாழ்ப்பாண சமயநிலை, ஆகிய நூல்கள் இவரால் விமர்சன ரீதியான விரிவான பதிப்புரைகளுடன் மீள்பதிப்புச் செய்யப்பட்டன. இவற்றை முறையே இலங்கைத் தமிழியற் கழகமும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வெளியிட்டிருந்தன. இவரால் எழுதப்பட்ட இருபத்தெட்டு ஆய்வுக்கட்டுரைகள் இலங்கை, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து வெளிவரும் ஆய்விதழ்களில் வெளிவந்துள்ளன. இது போன்று இருபத்தொரு சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்குகொண்டு இவர் ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோ வேதாந்த சபையினரின் அழைப்பின் பிரகாரம் 2020 செப்ரம்பரில் சிக்காக்கோவில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் தொடர்பான கருத்தரங்கில் இவர் நிகழ்நிலையில் சிறப்புரை ஆற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆய்வுப்பணிகளுக்கு அப்பால் இந்துநாகரிக அறிவுப்புலத்தின் பரப்புகை தொடர்பிலும் இவருடைய பணிகள் தேசிய ரீதியில் நீட்சி பெற்றுள்ளன. இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நூலாக்கக் குழுவின் ஆலோசகர்சபை மற்றும் எழுத்தாளர்குழு ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் இவர், தேசிய கல்வி நிறுவகத்தின் இந்துநாகரிகம் மற்றும் இந்துசமய பாடங்களுக்கான பாடவிதானக் குழுவின் ஆலோசகர் சபையிலும் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவால் வெளியிடப்படும் இந்துக்கலைக்களஞ்சியத்திற்கான ஆலோசனைக் குழுவிலும் எழுத்தாளர் குழுவிலும் இவரது காத்திரமான பங்களிப்பு ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இடம்பெற்றுள்ளது.

*Guru Printers, Thirunelvely. 021 222 8266*